329

தொகுதி 6.] 1927ஷ மார்ச்மீ 1வ [பகுதி 2.

# மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்



பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலயம், சென்னை.

# மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922௡ பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறு மாதங்களுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவு பெறும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தலிங்கின் அஷ்டஜெயங்கள்" என்ற நாவல்கள் முடிவுபெற்று 1927௡ ஜனவரிமீத்திலிருந்து கற்பகச்சோலையின் அற்புதக் கொலை என்ற நாவல் தொடங்கப்பட்டிருக்கிறது. முடிவான நான்கு நாவல்களும் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டுமன்றி அவற்றின் சஞ்சிகைகள் கிடையா. பழைய சந்தாதாரர்கள் 1927-ம் வருஷத்திற்கு பணம் கட்டி விட்டால் அவர்களுக்கு இப்போது தொடங்கப்பட்டிருக்கும் "கற்பகச்சோலையின் அற்புதக் கொலை" என்னும் நாவல் கிடைப்பதோடு அதன்பின் தொடங்கப்படும் நாவலும் கிடைக்கும். 1927-ம் வருஷத்திற்குப் புதிதாகச் சேரும் சந்தாதாரர்களுக்கு 1927௡ ஜனவரிமீத்தில் தொடங்கப்பட்டிருக்கும் "கற்பகச்சோலையின் அற்புதக் கொலை" என்னும் நாவலின் ஒரு சஞ்சிகை மட்டும் கிடைக்காததலால் அவர்கள் சந்தாத் தொகையில் கூட 4 அணா சேர்த்து ரூ. 2—12—0 அனுப்பிவிட்டால் அந்த சஞ்சிகையும் அவர்களுக்குச் சேர்த்தனுப்பப்படும். இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங் கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம்: எப்பொழுது சந்தாதாராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| அமராவதி 2 பாகமும் | ரூ. | 4 | 0 | 0 |
| பவளத்தீவு 2 பாகமும் | ,, | 3 | 0 | 0 |
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் | ,, | 9 | 10 | 0 |
| அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தலிங்கின் அஷ்டஜெயங்கள் | | 1 | 12 | 0 |

மானேஜர்:—"ஆனந்த நிலையம்" தபால் பெட்டி, நெ. 167 மதராஸ்.

சிறுவன் " அதில் ஒரு குதிக்கால் குறியிருந்தது" என்று கூறிவிட்டு " ஆ! மறுபடி பொய் கூறிவிட்டேன். நான் இப்படி முன்யோசனையின்றி தற்செயலாய்ப் பொய் கூறிய போதெல்லாம் பின்னுல் அதனுல் நன்மையே விளைந் திருக்கிறது" என்று தனக்குத் தானே எண்ணிக் கொண்டான்.

அவனுக்கு வைத்தபெயர் சரியானதே. அவன் உண் மையில் தான் கண்ட உளவுகள் இரண்டையும் அச்சுதம் பிள்ளையிடம் கூறவேண்டுமென்று எண்ணியே சென்றுன். ஆனுல் இரண்டிலும் பொய்யே கூறிவிட்டான்.

அச்சுதம் பிள்ளை யவன் கூறியவற்றைக் கவனமாய்க் கேட்டபின் " திருவேங்கடம்! உனக்குத் துப்பறிவதில் மிக்க ஆவலே; ஆனுல் குதிக்கால் அடையாளம் ஆயிரம் பார்த்தாலும் வித்தியாசம் தெரியாது". என்றுன்.

திருவேங்கடம் வியப்போடு " ஆம். ஆம். நான் வேணுமென்றே பார்த்து மிருக்கிறேன்" என்றுன். அச்சு தம்பிள்ளை "நீ இதை யாராய்ச்சியே செய்திருக்கிருய். இத் தகைய யுக்தி வேலை யுன்னிடமிருந்தால் நீ துப்பறியும் வேலையில் ஜெயமடையலாம்" என்றுர்.

திரு:—"அப்படியாயின் அழுகுக்கு வைக்கும் பொத்தா னைப்பற்றி உன்னுல் ஒன்று மறியக் கூடவில்லை. சட் டைப் பொத்தானுயின் அல்லது..." என்று பேச்சை நிறுத்தி விட்டான்.

அச்சுதம் பிள்ளை சிந்தனையோடு அவனை நோக்கி "நான் நகைப்பதில்லை யென்று கூறிவிட்டேன். ஆயினும் நீ கண்டுபிடித்த உளவுகள் பயனற்றவையே யென்றுதான் நான் கூறவேண்டும். நீ என் மனமொத்த நண்பரிடம் வேலை செய்துகொண் டிருந்தபடியால் உனக்கொரு நன்மை

186512
600 003

செய்ய விரும்புகிறேன். நீ யின்னும் வேறு வேலை சம்பாதித்துக் கொள்ளவில்லையே?" என்றார்.

திரு:—"இல்லை. எனக்கு ஒரு வேலை கிடைக்கச் செய்தால் மிக்க நன்றியுள்ளவனாக விருப்பேன்" என்றான்.

அச்சு:—"ஆகா, செய்கிறேன். நீ போய் மாலை மூன்று மணிக்கு வா. அதற்குள் உனக்கு ஒரு வேலை பார்த்து வைக்கிறேன்" என்றார்.

திருவேங்கடம் அவ்வாறே வருவதாகக் கூறிச் சென்றான். செல்லும்போது "திடீலென்று பொய் கூறும்படி எனக்குள்ளிருந்து எதுவோ வொன்று தூண்டுகிறது. இவனிடம் உண்மையைக் கூறாமற்போனதால் கெடுதி யொன்றுமிராது. கூறி யிருந்தாலும் இவன் நம்பியிரான். எதற்கும் ஒரு துப்பறிபவன் எப்போதும் எல்லாரிடமுமே உண்மையைக் கூறிவிடலாகாது" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டு சென்றான்.

திருவேங்கடம் மாலை மூன்று மணிக்கு அச்சுதம் பிள்ளையிடம் சென்றபோது அவர் "உனக்குப் பள்ளூரில் ஒரு நல்ல வேலை பார்த்திருக்கிறேன்" என்றார். திருவேங்கடம் முகவாட்டமடைந்து "ஆ! பள்ளூரிலா? இங்கேயே யாயின்..." என்றான். அச்சுதம்பிள்ளை "உனக்குப் பிரியமின்றேல் விட்டுவிடு. ஆனால் அது நல்லவேலை. கெட்டிக்காரரான ஒரு வக்கீலிடம் காரியாலயத்தில் வேலை. சேதுராம் என்பவர்-அவரும் நல்ல சூக்குமபுத்தி யுடைய ஒரு வாலிபன் வேண்டுமென்றார். அங்கு அனேக விவகாரங்கள் நடக்கும். துப்பறிய வேண்டியதற்கு அவசியமான யோசனைகள் சேகரம் செய்ய அனுகூலமான இடம். வாரம் ஒன்றுக்குப் பத்து டாலர் சம்பளம்" என்றார்.

திருவேங்கடம் கடைசியில் அதற்குச் சம்மதித்த போது அச்சுதம்பிள்ளை "அவர் வெளியூருக்கு இரண்டு

மூன்று நாட்களுக்குச் செல்லவேண்டுமாம். ஆகையால் இன்றே நீ வந்து சேரவேண்டும் என்று தந்திமூலம் கூறினார்'' என்றார். திருவேங்கடம் "இப்போது நான் சில உடைகளை வாங்கவேண்டும். அதற்காக எப்போதும் என் சகோதரி கூட வருவாள். அவளுக்கு இரண்டொரு நாட்களுக்கு வர முடியாது. மேலும் அவற்றை வாங்க ஒரு வாரமாவது பிடிக்கும்-ஆதலால் இன்னும் ஒரு வாரம் கழித்தே செல்வேன். அவர் அதற்குச் சம்மதியாவிடில் எனக்கு அதிஷ்டமில்லை என்று நினைக்கவேண்டியதே'' என்றான்.

அச்சுதம்பிள்ளை, தாம் என்ன கூறியும் அவன் ஒரே பிடிவாதமாகக் கூறிவிடவே, "நான் அவரைக் கேட்டுப் பார்க்கிறேன். நீ போய் வரலாம்'' என்று அவனை யனுப்பிவிட்டார்.

---

## 15-வது அத்தியாயம்.

அம்புஜம் தன் சிறிய தந்தையின் பெட்டியிலிருந்து அகப்பட்டதாய்க் கூறிய கடிதத்தில் கண்டபடி அம்மையப்பனே அவரைக் கொன்றிருக்க வேண்டுமென்றும் இறந்தவர் விருப்பப்படி யவனைத்தேடாமல் பேசாமலிருப்பதே நலம் என்றும் பினாகபாணி அம்புஜத்தினிடம் கூறினான். ஆனால் போலீஸார் அம்மையப்பனைக் கண்டு பிடிக்க முயன்றதோடு இலக்ஷ்மணன்மேல் கண் வைத்தபடியிருந்தார்கள். சுந்தரத்தையும் கவனித்தபடி யிருந்தார்கள்.

பினாகபாணி அம்புஜத்தின் வனப்பில் மயக்கங் கொண்டபடியால் அவள் எதைக்கூறினும் தலையசைக்கும் நிலைமையிலிருந்தான். அவன் அடிக்கடி அவளை வந்து

காண்பதும் அவள் பிரியப்படி நடப்பதுமாகவே யிருந்தான். அவர்கள் இருவரும் சம்பாஷிப்பதைக் கேட்ட இலக்ஷ்மணன், "இது, இக்கடிதம், இப்போது முளைத்தது அதிசயமே. இது காறும் எங்கிருந்தது இது?" என்றான்.

அம்புஜம், "ஒரு அலமாரியில் சில கடிதங்களுக்கிடையில் இருந்தது" என்றாள்.

இலக்ஷ்:—அப்படியானால் யாவற்றையும் சோதனை செய்த போலீஸார் இதைக் காணமல் விட்டது மிக்க அதிசயமே.

அம்புஜம் புன்னகையோடு, "இப்போது நானே இதைக் கண்டுபிடித்தவரையில் அதைப்பற்றி அவசியமில்லை. நமக்கு அம்மையப்பன் யாரென்று தெரியாவிடினும், சிற்றப்பா அவனைத் தேடவேண்டாமென்று கட்டளையிட்டிருந்தாலும், மர்மம் விளங்கிவிட்டதாக நாம் எண்ண வேண்டியதே" என்றாள்.

இலக்ஷ்மணன் அசட்டையாகவே "ஆகா. எத்தனையோ உத்தேசங்களில் இதுவும் ஒன்று. என் வரையில் இதில் பசையிருப்பதாகத் தெரியவில்லை. பினகபாணியும் அப்படியே தான் கருதுவானென்று நம்புகிறேன். என் பினகபாணி! நீ என்ன நினைக்கிறாய்?" என்றான்.

பினகபாணி சற்று கடுகடுப்பாகவே "என் இதில் சந்தேகப்படத்தக்க காரணம் ஒன்றும் புலப்படவில்லை" என்றான். இலக்ஷ்மணன் யாரேனும் தன் அபிப்பிராயத்திற்கு மாறாகப் பேசினால் அதிகமாக அவர்களிடம் வாதாடுவதில்லை. பினகபாணி தனியாய் அம்புஜத்தோடு சம்பாஷித்துக் கொண்டிருந்தால் சந்தோஷமாயிருப்பான். இலக்ஷ்மணன் கூட இருக்கவே மெதுவாய் எழுந்து போய் விட்டான்.

அவன் சென்றதே அம்புஜம் இலக்ஷ்மணனை நோக்கி

"இக்கடிதத்தைப்பற்றிய விஷயத்தில் ஏன் இப்படிக் கருது கிருய்?" என்ருள்.

**இலக்ஷ்மணன்:**—எப்படிக் கருதுகிறேன்?

**அம்பு:**—அலட்சியமாய், என் சிற்றப்பா அதை யெழுதி யிருந்தால் அவருடைய முடிவைப்பற்றி அவருக்குத் தெரியுமல்லவா?

**இலக்ஷ்:**—"ஆம். அவர் எழுதி யிருந்தால்.

அம்புஜம் திடுக்கிட்டு ஏன்! நீ நினைப்பது என்ன? அவர் எழுதியதில் உனக்குச் சந்தேகம் உண்டாய்விட்ட தேன்? அவருடைய அச்செழுத்து கையெழுத்து எல்லாம் எனக்குத் தெரியுமே" என்ருள்.

இலக்ஷ்மணன் "ஒகோ! உனக்குத் தெரியுமோ?" என்று கேலியாய்க் கூறிவிட்டு "அம்புஜம்! இப்போது நீ மிக்க அழகாய்க் காண்கிருய்" என்ருன்.

**அம்பு:**—அது சாதாரண சங்கதிதானே. அதற்காக இப் போது குறிப்பிட வேண்டியதில்லையே.

**இலக்ஷ்:**—சாதாரணந்தான்-ஆனல் இச்சமயம் குறிப்பிட வேண்டியதா யிருக்கிறது. நீ இங்கே இக்குழப்பத்தி லும் துயரத்திலும் இருப்பதை விட உன்னை நிம்மதி யான ஒரு விடத்திற்கு அழைத்துச் செல்வதாயின் எனக்கு மிக்க சந்தோஷம். என்மேல் இச்சந்தேக மும் கலவரமு மில்லாவிட்டால்...

அம்புஜம் வேணுமென்றே "எல்லம்மாளையும் கூட அழைத்துச் செல்லலாமா?" என்ருள். அவன் எல்லம் மாள்மேல் காதல் கொண்டிருக்கிருனென்று அவளுக்குப் பூரண சந்தேகம். ஆகையால் உண்மையை யறிவோம் என்று அவ்வாறு கூறினள்.

**இலக்ஷ்:**—உனக்குப் பிரியமாயின் அப்படியே செய்வோம்.

**அம்பு:**—நீ...நீ....அதைச் செய்யவில்லையே?

இலக்ஷ்:—நான் கூறமாட்டேன்.

அம்பு:—"அப்படியாயின் இதற்கு இரண்டர்த்தங்கள் இருக்கின்றன. ஒன்று நீ நிரபராதி; அதனால் மனவருத்தத்தோடு அப்படி கூறுகிறாய். அல்லது...அல்லது..." என்று தயங்கினாள்.

அதற்குள் இலக்ஷ்மணன்:—"அல்லது குற்றவாளி-கொலையாளி" என்றான்.

அம்பு:—ஆம். நீ எதையேனும் கூறுவதுதானே ?

இலக்ஷ்:—அம்புஜம்! நான் குற்றவாளி அல்லது நிரபராதியென்று இரண்டிலொன்று அறிய வேண்டுமென்று உனக்கு உண்மையாகவே அக்கரை யிருக்கிறதா ?

அம்பு:—ஆம். இருக்கிறது.

இலக்ஷ்மணன் அவளை யாலிங்கனம் செய்துகொண்டு அறையை விட்டு வெளியிற் சென்றான். அம்புஜம் சாளரத்தருகில் சென்று அவன் வீதியில் செல்வதைப் பார்த்துக் கொண்டே யிருந்து "அந்தோ! இவன் உண்மையை யின்னதென்றறிய நம்மால் முடியவில்லையே. அந்த எல்லம்மாள் விஷயத்தைப்பற்றி கேட்கலாமென்றால் நமக்குத் தைரியமில்லை. இவன் நம்மேல் காதலுள்ளவன் போல் பேசுகிறான்" என்று தனக்குத்தானே கூறிக்கொண்டாள்.

அதன்பின் அம்புஜம் தன் ஆசனத்தில் போய் உட்கார்ந்து சிந்தனையிலிருந்தாள். அச்சமயம் யாரோ வரும் சத்தம் கேட்டுத் திரும்பிப்பார்த்தாள். அச்சுதம்பிள்ளை புன்னகையோடு வருவதைக் கண்டாள். அப்போதுதான் முதல் தடவையாக அவன்மேல் அவளுக்கு வெறுப்பு தோன்றியது. தான் அவன்மேல் உண்மையில் காதல் கொண்டிருக்கவில்லை யென்று அவளுக்குத் தெரியும். ஆனால் அவன் விஷயத்தில் நட்பும் நன்மதிப்பு மட்டும் எப்போதுமேயிருந்தன.

அச்சுதம்பிள்ளை எத்தகைய கூட்டத்திலிருந்தாலும் மற்ற பேரை விட இரண்டு மூன்று அங்குலமும் பெருந் தன்மையான பார்வையுடைய முகமும் உடையவனுதலால் யாவர் பார்வையையும் கவரக்கூடிய தோற்றமுடையவன். அம்புஜம்கூடத் தன் சிற்றப்பன் இறப்பதற்கும், இலக்ஷ்மணன் அங்கு வருவதற்கும் முன்பு அவனை மணம்புரியலா மென்றே கருதி யிருந்தாள்.

அச்சுதம்பிள்ளை "நீ என்னமோ சிந்தனையிலிருக் கிருய்" என்றபோது அம்புஜம் வேணுமென்றே "நான் இலக்ஷ்மணனைப்பற்றி சிந்திக்கிறேன்" என்ருள்.

அச்சுதம்பிள்ளை "நான் அந்த அம்மையப்பன் விஷய மாக உன்னிடம் பேசக் கருதி வந்தேன்" என்ருன்.

அம்பு:—சரி. அது இலக்ஷ்மணனைத் தப்பவைக்குமா?

அச்சுதம்பிள்ளை கோபப் பார்வையாய் "என்? நீ அவன்மேல் காதல் கொண்டிருக்கிருயோ?" என்ருன். அம்புஜம் ஆம் என்ருள்.

அச்சுதம்பிள்ளை மிக்க வெறுப்போடு "அப்படியாயின் அவன் தப்பமாட்டான். அவனை யிந்தச் சந்தேகத்தி லிருந்து தப்பவைப்பதும், அல்லாததும் என் கையிலிருக் கிறது என்பது உனக்குத் தெரியுமா? அவன் உயிரே யென் கையிலிருக்கிற தென்பதை நீ யறிவாயா?" என்ருன்.

இம்மொழிகளைக் கேட்டதே அம்புஜம் பீதியோடு அவனை நோக்கி "அப்படியாயின் அவன் நிரபராதி யென்று தெரிந்திருந்தே நீ யவன்மேல் சந்தேகமுண்டா யிருக்கும்படி விட்டிருக்கிருய்" என்ருள்.

அச்சு:—அதற்கு மாருக அவன் தப்பக்கூடிய ஒரே வழி உன் சிற்றப்பன் பெட்டியிலிருந்து நீ கண்டுபிடித்த அக்கடிதத்தி லிருக்கிறதென்று நான் அறிவேன். மேலும் எனக்கு இன்னொரு விஷயம் தெரியும்.

அம்பு:—என்ன தெரியும்.

அச்சு:—அக்கடிதத்தை யார் எழுதியதென்று எனக்குத் தெரியும்.

அம்பு:—நீ கூறுவதன் அர்த்தமென்ன?

அச்சு:—அக்கடிதத்தை நீயே யெழுதினாய். குற்றவாளியைத் தப்பவைக்க இது மிக்க சாமார்த்தியமான ஆலோசனையே. ஆயினும் என்னை யேமாற்ற முடியாது.

அம்பு:—உனக்கெப்படி யது தெரியும்?

அச்சு:—உன் சிற்றப்பனுடைய கடிதங்கள் பத்திரங்கள் எல்லாவற்றைப்பற்றியும் எனக்கு நன்றாகத் தெரியும். அக்கடிதம் அவர் எப்போதும் எழுதுகிற மாதிரி கடிதமல்ல. அம்மாதிரி கடிதத்தில் அவர் ஒரு போதும் எழுதியதில்லை. மேலும் இன்னொருவன் மேல் சந்தேகம் ஏற்பட்டாலன்றி இலக்ஷ்மணன் தப்ப மாட்டான் என்பதைக் கேள்விப்பட்ட பிறகே நீ யதை யெழுதினாய். ஆனால் அது மிக்க சாமார்த்தியமே. நீயேன் அப்படிச் செய்தாய். அதுதான் கேள்வி. நீயே இன்னொரு சந்தேக ஆளை சிருட்டித்தாய். ஏன்? நீ இலக்ஷ்மணன்மேல் காதல் கொண்டிருக்கிறாய்.

அம்புஜம் நிமிர்ந்து நின்று "ஆம். அதுதான் காரணம். இலக்ஷ்மணன் நிரபராதி யென்று எனக்குத் தெரியும். நீயும் கிருஷ்ணராவும் இன்னொருவன் மேல் சந்தேகம் ஏற்பட்டாலன்றி இவன் தப்பமாட்டான் என்று கூறினீர்கள். அதனால் நான் இத்தந்திரம் செய்தேன். அதற்காகச் சந்தோஷப்படுகிறேன். இதனால் தப்பிதம் ஒன்றுமில்லை. ஒரு நிரபராதியின் உயிரைக் காப்பாற்ற இப்படிச் செய்வது நியாயமே" என்றாள்.

அச்சுதம்பிள்ளை தான் அதற்கு உடன்பட மாட்டேனென்று வாதித்துக் கடைசியில் "நீ யுடனே என்னை

மணம் புரிந்துகொண்டால் அப்படிச் செய்கிறேன்'' என்றான். அம்புஜம் "இந்த விவகாரம் ஒரு முடிவிற்கு வராமுன் மணம் புரியமாட்டேன். அதோடு நான் உன் மேல் காதல் கொள்ளவில்லை என்ற வுண்மையைக் கூறு கிறேன்'' என்றாள்.

அவள் என்ன வேண்டிக்கொண்டும் அந்த அயோக் கியன் ஒரே பிடிவாதமாய் "நீ என்னையே மணம் புரிந்து கொள்வதாய் வாக்களித்தால் தான் நான் இலக்ஷ்மணன் தப்பும்படி விடுவேன். என்மேல் உனக்குக் காதலில்லை யேல் பிறகு உண்டாகும்படி நான் செய்துகொள்வேன். இன்றேல் யாவற்றையும் வெளியிட்டு விடுவேன். நீ கட் டாயம் என்னையே மணம்புரிய வேண்டும்'' என்று ஒரு பிடிவாதமாக நிர்த்தாட்சணியமாய்க் கூறினன்.

அம்புஜம் என்ன செய்வாள் பாபம்! இலட்சுமணன் நிரபராதி யென்று அவளுக்கு நன்றாகப் புலப்படுகிறது. அச்சுதம்பிள்ளை மேல் தனக்குக் காதலில்லை யென்பதையும் வெளிப்படையாய்க் கூறிவிட்டாள்; கடைசியில் நிரபராதி யாகிய இலக்ஷ்மணனைக் காப்பாற்ற அச்சுதம் பிள்ளையை மணம் புரிவதாக ஒப்புக்கொண்டாள்.

* * * * * *
* * * * *

திருவேங்கடம் அச்சுதம் பிள்ளையிடம் சம்பாஷித்த போது தான் உடைகள் வாங்க வேண்டுமென்றும் தன் சகோதரியும் கூட வரவேண்டும் என்றுங் கூறினன். உண் மையில் அவனுக்குச் சகோதரியுமில்லை; தாய் தந்தையரு மில்லை. அவன் தன்மேல் மிக்க அன்புடைய தன் சிறிய தாயிடம் இருக்கிறான். அவளிடம் அவன் பொய் பேசுவ தில்லை. இப்போது வேலை யில்லாததால் அவன் விசேஷ மாய் தன் சிறிய தாயின் கூடவே பிரியாமலிருக்கிறான்.

திருவேங்கடம் வீட்டில் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு நடந்த விஷயங்களைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டேயிருந்து கடைசியில் "ஆ! அந்த உலகாம்பாள் டெலிபோனில் என்ன சங்கதியைத்தான் உண்மையில் கேட்டாள்?" என்று தனக்குத்தானே கேள்வி கேட்டுக் கொண்டு, அதை விசாரிப்போம் என்று தீர்மானித்து உடனே யெழுந்து உலகாம்பாளிடம் சென்றான்.

உலகாம்பாளும் இன்னும் வேறு வேலை பார்த்துக் கொள்ளவில்லை. ஆதலின் திருவேங்கடத்தைக் கண்டதே அதைப்பற்றி விசாரித்தாள். அதன்பின் அவன் "நமது எஜமான் மடிந்ததினம் வந்த டெலிபோன் சமாசாரத்தில் மனோரஞ்சித அத்தர் என்று நீ கேட்டாயா? சரியாக ஆலோசித்துக் கூறு. இச்சம்பாஷணை நம் வரையில் தான்" என்றான்.

உலகாம்பாள் "ஆம் மனோரஞ்சிதம் என்றுதான் கேட்டதுபோ லிருக்கிறது. அது அத்தரின் பெயராகத் தானே யிருக்கவேண்டுமென்று நான் அத்தர் என்று கூறி னேன்" என்றாள்.

திருவேங்கடம் "சரி இருக்கட்டும் - அவன் அதைக் கொடுக்கிறேன் என்றானா அல்லது அது கிடைக்கச் செய்கி றேன் என்றானா? நன்றாக யோசித்துக் கூறு" என்றான்.

**உலகாம்பாள்:**—ஆ! ஆம். இப்போது நினைவிற்கு வரு கிறது. நாம் சிலது கண்டுபிடிக்கலாம் என்று சொன்னான்.

**திரு:**—அப்படியா கூறினான். நிச்சயந்தானே இது?

**உல:**—"ஆம் உண்மையே" என்றாள்.

அதைக் கேட்டதும் திருவேங்கடம் சரி நான் பிறகு வருகிறேன் என்று கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டுத்

துரிதமாக இரத்தினசாமிப் பிள்ளையின் மாளிகைக்குச் சென்று அம்புஜத்தைக் கண்டு,

"அம்மா! ஒரு மனு. அதாவது உனது சிற்றப்பா சேகரம் செய்து வைத்திருக்கும் சீவ வர்க்கங்களைக் கொஞ்சம் எனக்குக் காட்டக்கூடுமா-நான் அவற்றைக் கண்ணால் மட்டும் காண்கிறேன். எதையும் தொடமாட்டேன். தயவு செய்து காட்டுகிறாயா?" என்றான்.

அம்புஜம் "நீ எதையும் தொடாமலே பார்ப்பதாயிருந்தால் பார்" என்று கூறி அவை யிருக்கும் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

அங்கு வரிசையாக அலமாரிகளில் ஒவ்வொருவிதப் பூச்சி புழு யாவும் புட்டிகளில் திராவகத்தில் உருவழியாமல் பதனம் செய்து வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு புட்டியின் மேலும் அதிலிருக்கும் ஜந்துவின் பெயர் முதலிய அடையாளங்கள் வரையப்பட்ட சீட்டு ஒட்டப்பட்டிருக்கிறது. திருவேங்கடம் ஒவ்வொரு புட்டியும் பார்த்தான். எதிலும் அந்த மனோரஞ்சிதம் என்ற பெயர் இல்லை. யாவும் பார்த்தபின் அம்புஜத்தை நோக்கி "அம்மா! மிக்க வந்தனம். போய் வருகிறேன்" என்று கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டான்.

திருவேங்கடம் அரைமணி நேரங்கழித்து ஒரு பெரிய மாடி வீட்டின் வாயிற்படியில் நின்று வேலைக்காரனை நோக்கி "நான் மாரியப்பப் பண்டிதரைக் கண்டு பேச வேண்டும்" என்றான்-வேலையாள் "நீ யார்?" என்றான். வாலிபன் "நான் ஒரு சாதாரணமானவன். ஆனால் மிக்க முக்கியமான விஷயத்தைப்பற்றி யவரிடம் இரண்டொரு வார்த்தை பேசவேண்டும்-இந்தா இந்த சீட்டைக் கொண்டு போய்க் கொடு" என்று தன் ஜேபியிலிருந்து ஒரு புத்தகத்தை யெடுத்து ஒரு கடிதம் அதிலிருந்து கிழித்து "இரத்

தினசாமிப் பிள்ளையின் மரணத்தைப்பற்றித் தங்களிடம் முக்கியமாகப் பேசவேண்டும்'' என்று எழுதி வேலையாளிடம் கொடுத்து "இதைத் திறந்து பார்க்காமல் அவரிடம் கொண்டுபோய்க் கொடு'' என்றான்.

சற்று நேரங்கழித்து வேலையாள் திரும்பி வந்து அவனை யுள்ளே யழைத்துச் சென்று பண்டிதர் முன் நிறுத்தினன். திருவேங்கடம் அவரிடம் பேசியதில் "மனோரஞ்சனி என்ற ஒருவித வெட்டுக்கிளி யிருக்கிறதென்றும், அது கருங்கண்ணி (கருங்கடல் அல்ல) என்ற பூச்சி வகுப்பைச் சேர்ந்ததென்றும்'' தெரிய வந்தது.

அதன்மேல் திருவேங்கடம், அப்பூச்சி கற்பகச்சோலையில் கிடைக்குமோ என்று கேட்டான். பண்டிதர் "ஆம். அங்கு போன் வைத்தால் பிடிக்கலாம்'' என்றார்.

திருவேங்கடம் திடுக்கிட்டு "ஆ! அதற்குப் போன் வைப்பதோ? எத்தகைய போன்? தயவு செய்து கூறும்'' என்றான்.

**பண்டிதர்:**—போன் என்றால் சாதாரண போனல்ல. ஒரு புட்டி, பால்புட்டி போன்ற புட்டி, அதில் கொஞ்சம் வெல்லப்பாகும் பெருங்காயமும் போட்டு அப்புட்டியைக் கழுத்து வரையில் தரையில் சாய்வாய்ப் புதைத்து விட்டால் அப்பூச்சிகள் வந்து அதில் சேரும்'' என்றார்.

திருவேங்கடம் மிக்க சந்தோஷமடைந்து "இதற்குப் போன் என்றா கூறுவதோ?'' என்றான். அவர் "ஆம் போன் என்று தான் எங்கள் பரிபாஷையில் கூறுவது'' என்றார்.

வாலிபன் "அப்புட்டியில் கெட்ட நாற்றமிருக்குமோ?'' என்றான். பண்டிதர் "பெருங்காயம் இருப்பதால் துர்நாற்ற மடிக்கும். இதற்கும் இரத்தினசாமிப்

பிள்ளை கொலை யுண்டதற்கும் ஏதேனும் சம்பந்த முண்டோ?" என்றார்.

**திரு:**—தாங்கள் பத்திரிகையில் அதைப்பற்றிய விஷயங் களைக் காணவில்லையோ?

**பண்:**—இல்லை. எனக்கு அவ்வளவு அவகாசமில்லை.

**திரு:**—"இந்தக் கதையைக் கூறித்தான் அவரைக் கற்பக வனத்திற்கு வரும்படி செய்து கொன்றுவிட்டார் கள்" என்று கூறிவிட்டு அவருக்கு மிக்க வந்தன மளித்துச் சென்றான்.

அவன் மறுபடி உலகாம்பாளிடம் சென்று அவளை நோக்கி "டெலிபோனில் பேசியவன் கருங்கடல் என்று கூறியது உனக்கு நன்றாகக் கவனமிருக்கிறதா?" என்றான்.

**உல:**—ஆயிரம் தரம் ஆம் ஆம் என்று கூறினாலும் மறுபடி மறுபடி யதையே கேட்கிறாயே யென்ன?

**திரு:**—அவன் கடல் என்று கூறினானா?

உலகாம்பாள் அவனை யுற்று நோக்கி "திருவேங் கடம்! நீ மந்திரவாதியா யிருக்கவேண்டும். நான் இப் போதுதான் நினைத்துக்கொண் டிருக்கிறேன். அவன் 'கருங்க' என்ற வரையில் தான் எனக்குக் கேட்டது. பிறகு கடல் என்று தான் கூறியிருப்பான் என்றெண்ணி நானே அவ்வார்த்தையைச் சேர்த்துக்கொண்டேன்" என்றாள்.

திருவேங்கடம் "அவன் கருங்கடல் என்றே கூற வில்லை. அவன் கூறியது கருங்கண்ணி" என்றான். உல காம்பாள் "ஆ! அதே வார்த்தை தான், இப்போது நன்றா கக் கவனமிருக்கிறது—அப்படி யென்றால் என்ன?" என்றாள்.

திருவேங்கடம் "அது கிடக்கட்டும். அவன் ஒன்று சொன்னால் நீ என் வேறொன்று கூறினாய்? அவன் மனோ

ரஞ்சனி என்றால் நீ மனோரஞ்சிதம் அத்தர் என்றாய்-கருங் கண்ணி யென்றால் கருங்கடல் என்றாய்'' என்றான்.

உலகாம்பாள் "எனக்கு அவற்றின் வித்தியாசம் தெரியவில்லை'' என்றாள். திருவேங்கடம் "அது உனக் குத் தெரியவேண்டிய அக்கரையுமில்லை. இப்போது நன் றாய்க் கவனித்துப்பார்-அவன் ஒரு போன் வைக்கப்பட் டிருந்தது என்றான். யார் வைத்திருந்தாலும் இருக்கட்டும். போன் வைக்கப்பட்டிருக்கிறது; உனக்கு மனோரஞ்சனி கருங்கண்ணி கிடைக்கும் என்ற கருத்து தானே அவன் கூறியது?'' என்றான்.

உல:—ஆம். அப்படித்தான் அதன் கருத்து என்று விளங்குகிறது. ஆனால் அதில் ஒரு அர்த்தத்தையும் காணோம்.

திருவேங்கடம் "அர்த்தமில்லாவிட்டால் போகட்டும்; அவ்வார்த்தைகள் வரையிற்றான் நமக்கு வேண்டியது. மற்றதை நான் பார்த்துக்கொள்ளுகிறேன். பத்திரம்! இப்போது நாம் பேசிய சங்கதி உன் மனதிலேயே யிருக் கட்டும். ஒரு பூதருக்காவது எள்ளளவு கூட மூச்சுவிடப் போகிறாய் பத்திரம்.

---

## 16-வது அத்தியாயம்.

உலகாம்பாளை விட்டுப் புறப்பட்டதே திருவேங்கடம் தனக்குள் சிந்திக்கலானான். "நம்மைப் பள்ளு ருக்குப் போகவேண்டாமென்று நமக்குள்ளிருந்து யாரோ கூறினார்கள். இப்போது நமக்கு இந்த உளவுகள் அகப் பட்டிருக்கின்றன. இதை நாம் என்ன செய்வது? அம்பு ஜத்தினிடம் கூறினால் போலீஸாருக்கு அதிருப்தி யுண்டா கும். அச்சுதம் பிள்ளையிடம் கூறினலோ போலீஸாருக்கு

நம்மேல் மிக்க கோபமுண்டாகும். மேலும் அச்சுதம் பிள்ளை நாம் கூறுவதை யலட்சியமாய்க் கவனிப்பான். கிருஷ்ணராவிடம் கூறினலும் அப்படியே. இதில் மிக்க அக்கரையுடைய ஆசாமி அம்புஜம். அவளிடமே கூறலாமென்றால் அந்தப் பிணைகபாணி கிருஷ்டப்பன் இவர்களிருப்பார்கள். நாம் கண்டுபிடித்தது பயனுடையதாக விருந்தால் அதன்பயனை யவர்கள் அடைவார்கள். சே! இந்த இடையிலுள்ள ஆசாமிகளிடம் இதைக் கூறலாகாது. நேராகத் தக்க அதிகாரியிடம் அதாவது துரைத்தன வக்கீலிடம் சென்று கூறவேண்டும்'' என்று தீர்மானித்துக் கொண்டு உடனே உடையணிந்து சென்றான்.

திருவேங்கடம் வக்கிலின் காரியாலயத்திற்குச் சென்ற போது அங்கு அச்சுதம்பிள்ளை, கிருஷ்டப்பன், கிருஷ்ணராவ் இவர்களும் இன்னும் சிலரும் கூட உட்கார்ந்து கொண்டு இரத்தினசாமிப்பிள்ளையின் கொலையைப் பற்றியே பேசிக்கொண் டிருந்தார்கள். திருவேங்கடம் திடுக்கிட்டு விட்டான். இவர்களனைவர் முன்னும் தன் உளவுகளை வெளியிடுவது அவனுக்குத் திருப்தியாயில்லை.

துரைத்தன வக்கீல் அங்கு ஒரு மூலையிலிருந்த நாற்காலியைக்காட்டி அதில் திருவேங்கடத்தை யுட்காரும்படி கூறி, "சற்று பொறு. பிறகு உன் சங்கதியைப்பற்றி விசாரிக்கிறேன்'' என்றார். திருவேங்கடம் அவ்வாறே யிருந்தான். கடைசியில் வக்கீல் அவனை யழைத்து மனதில் வேறெதையோ சிந்தித்துக்கொண்டே, "உன் சங்கதி என்ன? சொல்வதைச் சுருக்கமாகக் கூறிவிடு'' என்றார்.

ஆனல் வாலிபன், "அன்று டெலிபோனில் இரத்தினசாமிப்பிள்ளைக்கு வந்த சமாசாரம் என்ன வென்பதையும், அதில் அடங்கிய வார்த்தைகளின் கருத்தென்னவென்பதையும், பால் புட்டிக்கு அதிலுள்ள சம்பந்தத்தையும் உண்

மைப்படி யறிந்துகொண்டேன்" என்று கூறியதைக் கேட்டதே யாவரும் மிக்க வியப்போடு அவனை நோக்கினார்கள்.

திருவேங்கடம் தான் மாரியப்பப்பண்டிதரிடம் சென்று விசாரித்ததையும் டெலிபோனில் கூறப்பட்ட வார்த்தைகள் மனோரஞ்சனி - கருங்கண்ணி யென்றும் அவற்றின் பொருள் இன்னவை யென்றும் யாவும் கூறினான். வக்கீல் மிக்க வியப்போடு அவனை நோக்கி, "அந்த உலகாம்பாள் மனோரஞ்சித அத்தர் என்றும் கருங்கடல் என்றும் கூறினாளே" என்றார்.

திருவேங்கடம், "ஆம். அவளுக்கு அப்படிக் கேட்டதுபோல் இருந்தது. நான் மனோதத்துவசாத்திரத்தைப் பார்த்தேன். இத்தகைய சந்தேகமான சந்தர்ப்பங்களில் ஒருவர் தங்களுக்குத் தெரிந்த எந்த வார்த்தையை நினைத்துக் கொள்கிறாளோ அதே வார்த்தையைக் கேட்டது போல்தான் தோன்றும்" என்றான்.

வக்கீல், "ஆம் ஆம். அது உண்மையே. நானும் அச்சாத்திரத்தை வாசித்திருக்கிறேன். நீ யிதை யறிந்து கொண்டிருக்கிறாய்" என்று வியப்போடு கூறினார். வாலிபன், "ஆம். நான் ஒரு துப்பறிபவனாகக் கருதி யிருக்கிறேன்" என்றான்.

அச்சுதம்பிள்ளை வாலிபனை யசட்டை செய்துவிட்டு வக்கீலை நோக்கி, "இந்த விவகாரம் என்ன புது உத்தேசத்தில் நம்மைச் செலுத்துகிறது என்று பார்ப்போம்" என்றான்.

வக்:—"அந்த டெலிபோன் சங்கதியை யனுப்பியவன் இரத்தினசாமிப் பிள்ளையின் சாத்திர ஆராய்ச்சி விஷயங்களை எல்லாம் நன்கறிந்தவன். அதோடு அப்பூச்சிகளின் பெயர் அவற்றைப் பிடிக்கப் போன் வைக்கும் மார்க்கம் யாவும் அறிந்தவன். திருவேங்கடம்! இன்று

நீ மெய்யாகவே பெரிய வேலை செய்தாய். இந்த ஆலோசனை யுனக்கெப்படி யுதித்தது?'' என்றார்.

திருவேங்கடம், "அய்யா! நான் மிக்க கஷ்டத்தோடு நெடுநேரம் இதைப்பற்றி ஆலோசனை செய்தேன். இந்த உலகாம்பாள் தான் கேட்டதாகக் கூறிய வார்த்தைகள் எவையாயிருக்கும் என்று என்னல் கூடியவரையில் சிந்தித்தேன். அவற்றிற்கு ஏதோ சரியான அர்த்தமில்லாவிடின் இரத்தினசாமிப்பிள்ளை யுடனே சென்றிருக்கமாட்டார். உலகாம்பாளைப்பற்றி எனக்கு நன்றாய்த் தெரியும். அவள் தான் கேட்டதாகக் கருதியவார்த்தைகளைக் கூறினாள். அவர் எந்த விஷயமாக விருந்தால் அவ்வளவு அவசரமாகச் சென்றிருப்பார் என்று ஆலோசித்தேன். திடீலென்று ஒரு நினைவு வந்தது. புதுமாதிரியான பூச்சிகளைச் சேகரம் செய்து வைப்பது அவருக்கு மிக்க பிரியம். அச்சங்கதியாயின் எங்கு வேண்டுமாயினும் செல்வார். அதன் மேல் உடனே அவர் வீட்டிற்குச்சென்று அவர் சேகரம் செய்து வைத்திருக்கும் ஜீவன்களைக் காட்டும்படி அம்புஜம்மாளை வேண்டிக்கொண்டேன். அங்கு பார்த்தபோது அங்கு இருந்த ஜீவன்களில் எவற்றிற்கும் இப்பெயர்களிருப்பதாய்க் காணவில்லை. ஆனல் காலியாயிருந்த புட்டிகளின்மேல் ஒட்டப்பட்டிருந்த சீட்டுகளில், "மனோரஞ்சனி - கருங்கண்ணியினம்'' என்ற வார்த்தைகளைக் கண்டேன். உடனே மாரியப்பப்பண்டிதரிடம் சென்று விசாரித்தபோது உண்மை வெளியாயிற்று'' என்றான்.

யாவும் கேட்டுக்கொண்டபின் வக்கீல் திருவேங்கடத்தைப் புகழ்ந்துகொண்டு, "நான் இன்னொரு சமயம் உன்னிடம் பேசுகிறேன். இப்போது வேறு வேலை யிருக்

கிறது" என்றார். திருவேங்கடம், சரிதான் என்று வந்தனமளித்துவிட்டுச் சென்றான்.

திருவேங்கடம் சென்றபின் கிருஷ்டப்பன் "இப்போது இலக்ஷ்மணனே இதைச்செய்தவனென்று தெரிகிறது. அவன் கல்லூரியில் வாசித்திருக்கிறான். சாத்திரத்தில் இப்பூச்சிகளின் பெயர் முதலியயாவும் தெரியும். அல்லது வேணுமென்றே தெரிந்துகொண்டிருப்பான். அவனுக்கு அப்போன் வைக்கும் விஷயமும் தெரியும். யாவும் அவன் வேலையே. மேலும் அன்று அவன் அவரைப் பணம் கேட்டு சச்சரவு நடந்திருக்கிறது. அதோடு அவர் இலக்ஷ்மணன் கொன்றான் என்றார். இலக்ஷ்மணன் என்பதற்கு இராமருக்கு இலக்ஷ்மணன் போன்று எனக்குச் சகோதரன் போன்றிருந்தவன் என்று அர்த்தம் செய்யலாமெனின் அதே பெயருடையவன் இல்லையேல் அப்படி சந்தேகிக்கலாம்" என்பது முதலிய பல காரணங்களைக்கூறி இலக்ஷ்மணனே கொன்றவன் என்று தீர்மானமாகக் கூறிவிட்டான்.

இதைக்கேட்ட அச்சுதம் பிள்ளை இடிவிழுந்தவன் போல் திகிலடைந்து "இது நம்பத்தக்கதல்ல, இலக்ஷ்மணன்..." என்பதற்குள்.

**துரைத்தன வக்கீல்:**—"நான் கொஞ்சகாலமாக இதுதான் உண்மையென்று நம்பியே இலக்ஷ்மணனைக் கவனித்து வந்தேன். எல்லா ருசுவுகளும் அவனே குற்றவாளியென்று காட்டுகின்றன. இனி ஒரு சந்தேகமுமில்லை. அவன் கைது செய்யப்படவேண்டியதே" என்றார்.

அவ்வாறே அன்று இலக்ஷ்மணன் இரத்னசாமிப் பிள்ளையைக் கொலைசெய்தான் என்ற குற்றத்திற்காக சிறையாக்கப் பட்டான். பொது ஜனங்களில் பெரும் பாலார்

அவன் குற்றவாளியே யென்று கருதினர்கள். அவன் கொலை செய்வதற்குக் காரணங்கள் காணப்படுகிறவரையில் எவ்வாறு அவன் கொல்ல வில்லை யென்று கருதுவார்கள்? சிலர் மட்டும் "அப்பெயர் அவனுக்கிருப்பதாலும் அச்சமயம் அவன் அத்தோட்டத்தருகில் இருந்ததாலுமே அவன் கொன்ருன் என்று எப்படிக் கூறுவது. அதோடு அச்சமயம் அதாவது மாலைப்போது தான் அங்கிருந்ததாய் அவனே கூறினன். அவன் விஷயத்தில் சந்தேகமிருக்கிறவரையில் சந்தேகத்தின் பயன் குற்றவாளிக்கேயளிக்கப் படவேண்டும்" என்ருர்கள்.

சிறைச்சாலையி லிருக்கும் இலக்ஷ்மணனே ஜனங்கள் என்ன கூறுகிருர்களென்பதைப் பற்றியாவது தனக்கு நேரிடக்கூடிய ஆபத்தைப்பற்றியாவது சற்றுங் கவலையுடையவனகக் காணப்படவில்லை. எல்லாவற்றையும் மிக்க அலட்சியமாகக் கருதினன். துரைத்தன வக்கீல் பன்முறையவனைக் கண்டுபேசினர். இலக்ஷ்மணன் ஒரு முறை யவர் கேட்டதற்கு "நான் கொலை செய்யவில்லை. நான் அவ்ரோடு சச்சரவிட்டுக்கொண்டேன். வேறு மனிதரோடும் சச்சரவிட்டுக்கொண் டிருக்கின்றேன். ஆனல் அவர்களையெல்லாம் நான் கொன்று விடுவதில்லை" என்ருன்.

வக்:—நீ அத்தோட்டத்தி லிருந்தாயல்லவா?

இலக்ஷ்:—இருந்தேன். அதனல் செய்தேன் என்று ருசுவாய் விடுமோ?

வக்:—எங்களிடம் ருசு பூரணமாய் இல்லை என்பதனலேயே நீ தப்பித்துக் கொள்ளலாமென்று நம்புகிருய்.

இலக்ஷ்:—ஆம். வேறு எதை நம்புவது. என் வார்த்தையைத்தான் நீர் நம்பவில்லை.

வக்:—நீ தப்பவேண்டுமாயின் மிக்க சாமார்த்திய முள்ள வக்கீல் உனக்காக வாதிக்கவேண்டும்.

இலக்ஷ்:—அப்படியாயின் என்ன செய்யச் சொல்லுகிறீர் குற்றத்தை யொப்புக்கொள்ளச் சொல்லுகிறீரோ?

வக்:—"எப்படியாயினும் நீ குற்றவாளி யென்றே தீர்மானிக்கப்படும். ஆகையால் நீ யொப்புக்கொள்வது தான் நலம் என்பதே என்னுடைய ஆலோசனை" என்றார்.

இலக்ஷ்மணனிடம் அவ்வாறு கூறியதும் வக்கீல் அவன் அப்படியே செய்வான் என்று எண்ணிக்கொண்டு சென்றார்.

இலக்ஷ்மணன் சிறை செய்யப்பட்ட சங்கதியைக் கேட்டதே அம்புஜம் துயரத்தால் சோர்ந்துவிடவில்லை. அவள் மிக்க கோபமடைந்து அச்சுதம்பிள்ளையை நோக்கி, "இது மிக்க அநீதம்; எங்கும் நடவாத அக்கிரமம். இலக்ஷ்மணன் இதைச் செய்யவேயில்லை. உனக்கும் அது தெரியுமல்லவா? என்றாள்.

அச்சு:—அப்படிக்கருதவே யெனக்கு விருப்பம். ஆனால் இச்சமயம் அவன்மேல் பெரிய சந்தேகம் விழுந்திருக்கிறது. இவ்வளவிற்கும் கொன்றதற்குச் சரியான ருசு வில்லை.

அம்பு:—இல்லவேயில்லை. இருக்கவும் முடியாது. அவன் நிரபராதி யென்று எனக்குத் தெரியும். முன்னாவது கொஞ்சம் சந்தேகம் இருந்திருக்கும். இப்போது நிச்சயமாய் அவன் நிரபராதி யென்றறிவேன். அவன் ஒருபோதும் அவரைக் கொல்லவில்லை.

அச்சு:—நீ கூறுவதெல்லாம் ஒன்றுக்கும் பயன்படா. இத்தகைய விஷயத்தில் ஒரு ஸ்திரீயின் அபிப்பிராயத்தைக் கேட்டு ஜூரர்கள் முடிவு கூறப்போகிறதில்லை.

அம்பு:—"அப்படியாயின் அதற்கு வேண்டியதைக் கொண்டு

வருகிறேன். நீ எனக்கு உதவி செய்வாயல்லவா?" என்றாள்.

**அச்சு:**—"அம்புஜம் ஆகா செய்வேன். பதிலுக்கு நீ வாக்களித்தது தெரியுமல்லவா. என் மோதிரத்தை நீயணிந்துகொண்டு என்னை மணம்புரிய ஒரு நாள் நிச்சயித்துவிட்டபிறகு உண்மை யெப்படியிருந்தாலும் சரி நான் இலக்ஷ்மணனை எந்த விதத்திலாவது தப்ப வைத்து விடுகிறேன்" என்றான்.

அவன் வார்த்தைகளைக் கேட்டதே அம்புஜம் மிக்க வெறுப்போடு அவனை நோக்கி, "நீ வெறுக்கத்தக்க மனிதனே யாகும்" என்று கூறினாள்.

**அச்சு:**—"ஆம். அது எனக்குத் தெரியும். ஆயினும் என் கண்மணியே! எனக் குன்மேலிருக்கிற காதலால் நான் எத்தகைய அசாத்தியமான காரியத்தையும் செய்வேன். ஆனால் இதுகாறும் சத்தியமான நெறியில் நடந்து வந்த ஒரு மனிதன் திடீலென்று ஒரு அக்கிரமத்தைத் தெரிந்து செய்வதாயின் அவன் எத்தகைய தூண்டுதலால் செய்வான் என்பது உன்போன்ற ஒரு ஸ்திரீக்குப் புலப்படாது. உனக்காக நான் பிராணனையும் கொடுப்பேன். அதுவும் நான் அகப்படாமற் செய்வேன். என்மேல் ஒருவரும் சந்தேகங் கொள்ளமாட்டார்கள். நீ அவ்வளவு சாமார்த்தியமாக எழுதிய கடிதத்தை நான் மெய்ப்பித்து விடுவேன். அவர்கள் அதைப்பற்றி சந்தேகங்கொண்டாலும் உன் சிற்றப்பன் அதை எழுதவில்லையென்று அவர்கள் ருசுப்படுத்த முடியாது" என்றான்.

**அம்பு:**—இலக்ஷ்மணன் அது சிற்றப்பா எழுதினதாய் நம்பவில்லை.

**அச்சு:**—ஆ! ஏனெனில் அவனே அவரைக் கொன்றபடி

யால் அது அவர் எழுதியதல்லவென்றும் தெரிந்து கொண்டான்.

**அம்பு:**—ஆ! நான் அதைச் சிந்திக்கவில்லை. அதனால் அவனே கொன்றான் என்று தெரிகிறதா?

**அச்சு:**—சந்தேகமின்றி - உன்மனதிற்கே தோன்றும். அப்படியிருக்க எப்படி அவன்மேல் காதல் கொள்ளுகிறாய்?

**அம்பு:**—எப்படியோ, அது இருக்கட்டும். அத்திருவேங்கடம் அந்த டெலிபோன் சங்கதியைக் கண்டுபிடித்ததே இலக்ஷ்மணனைக் கைது செய்யக் காரணமாகவிருந்ததென்று கருதுகிறாயா?

**அச்சு:**—அதுவே அதிகமாகத் தூண்டியது. அச்சிறுவன் என்னிடம் வந்தான். ஏதோ உளவுகளைக் கண்டு பிடித்ததாய்க் கூறினான். நான் அவற்றைப் பொருட்படுத்தவில்லை. நான் அவனுக்குப் பள்ளூரில் ஒரு நல்ல வேலையமர்த்தியிருக்கிறேன். அவன் அதற்குச் செல்வது நலம்'' என்றான்.

அம்புஜம் சந்தோஷத்தோடு, "அவன்மேல் அளவு கடந்த அன்பு காட்டிவிட்டாய். அவன் நல்ல சிறுவன் என்பதே என் வரையில் புலப்பட்டது. சிறிய தந்தையும் அப்படியே கூறியிருந்தார்'' என்றாள்.

**அச்சு:**—நானும் எவ்வளவோ கதை கட்டிக் கூறினும் அச்சிறுவன் போக மறுத்துவிட்டான்.

அம்புஜம் அவனை யுற்று நோக்கி, "நீ யவனுக்கு அவ்வளவு உபகாரம் செய்யக் கருதியதற்கு ஏதோ காரணம் இருக்கவேண்டும். இன்றேல் செய்யமாட்டாய். என்ன காரணம்?'' என்றாள்.

அச்சுதம்பிள்ளை திடுக்கிட்டு விட்டான். ஆயினும் சட்டென்று சமாளித்துக்கொண்டு, "ஆ! நீ மந்திரவாதி.

பிறர் எண்ணத்தை யறியக் கூடியவள். ஆம் நான் செய்த தற்குக் காரணம் இருக்கிறது. அச்சிறுவன் அளவு கடந்த புத்திசூக்கும முடையவன். அவன் ஒரு பொத்தானையும் காலடியையும் கண்டு பிடித்ததாய்க் கூறினன். நான் அதை யிலட்சியம் செய்யாததுபோல் இருந்துவிட்டால், அவன் கண்டுபிடிக்கும் உளவுகள் ஒரு சமயம்...ஆபத்தாய்..முடியு மென்று அஞ்சினேன்..." என்றதே,

அம்புஜம், "யாருக்கு? இலட்சுமணனுக்கா?" என்றாள்.

**அச்சு:**—ஆம். ஆம். இப்போதில்லாவிடினும் சிக்கிரத்தில் அச்சிறுவன் கண்டுபிடிக்கக் கூடும். அவன் துப்பறி வதில் அபார சாமார்த்தியமுடையவனய்க் காணப் படுகிறான்.

பிறகு அச்சுதம்பிள்ளை தந்திரமான பேச்சுக்களால் அம்புஜத்திற்கு இலக்ஷ்மணனே கொலையாளி என்று சந் தேகம் பூராக உண்டாகும்படி செய்ததோடு, "இச்சிறு வனை வெளியிலனுப்பிவிடவேண்டும். இன்றேல் இவன் இலக்ஷ்மணனுக்கு விரோதமான ருசுவுகளைக் கண்டுபிடித்து விடுவான். இவன் மிக்க சூக்குமபுத்தி யுடையவன். நீ கண்டுபிடித்த அக்கடிதச் சங்கதியைக்கூட இவன் கண்டு பிடித்து விடக்கூடும். அதைப்பற்றி எள்ளளவு சந்தேகம் உண்டானலும் அதை மெய்ப்பிப்பது கஷ்டமாகமுடியும்" என்றான். அதோடு தான் பெரிய கஷ்டம் எடுத்துக் கொண்டு எப்படியாவது குற்றம் செய்த இலக்ஷ்மணனைக் காப்பாற்றத் துணிவதாய்க் கூறினன். இலக்ஷ்மணன் விடு தலையடைந்தால் எல்லம்மாள் பக்கம் திரும்புவானேயன்றி அம்புஜத்தின் பக்கம் திரும்பமாட்டான் என்று அச்சுதம் பிள்ளைக்குத் தெரியும்.

கடைசியில் அம்புஜமும் அச்சுதம்பிள்ளையும் இலக்ஷ

மணனைக்காணச் சிறைச்சாலைக்குச் சென்றார்கள். அம்புஜம் இலக்ஷ்மணனை நோக்கி, "ஓ! நீ ஏன் இப்படி யலட்சியமாய்ப் பேசுகிறாய்? உன்மேல் குற்றம் சாட்டப்பட்டால் இப்போது அச்சுதம்பிள்ளை உனக்காகவும் எனக்காகவும் உதவி செய்வதாய்க் கூறுகிறார்" என்றாள்.

இலக்ஷ்:—முட்டாள் தனம். எந்த ஜூரர்களும் என்மேல் குற்றம் சாட்டமாட்டார்கள்" என்றான்.

அம்பு:—ஏன்?

இலக்ஷ்:—ஏனெனில் சரியான ருசு அகப்படாது.

அம்பு:—அய்யோ! நான் நிரபராதியாதலால் அவர்கள் குற்றம் சாட்டமுடியாதென்று ஏன் நீ கூறலாகாது? நீ நிரபராதிதானே? அல்லவா?

இலக்ஷ்:—நீ என்ன நினைக்கிறாய்?

அம்பு:—நான் ஒன்றும் நினைக்கக்கூடவில்லை. உண்மையே கூறுகிறேன். நீ குற்றவாளியோ அல்லவோ என்னால் கூறமுடியவில்லை.

இலக்ஷ்:—அப்படியானால் அந்த உண்மையை ஒருபோதும் என்னிடமிருந்து அறிந்துகொள்ள மாட்டாய்.

அம்பு:—என்னிடம் நீ இம்மாதிரி பேசுவதன் அர்த்தமென்ன?

அச்சுதம்பிள்ளை தன் கோபத்தை யடக்கமுடியாமல் "ஆம். என்ன உன்னுடைய அர்த்தம்?" என்று கேட்டான்.

இலக்ஷ்:—ஒரு அர்த்தமுமில்லை. நமது கௌரவம் பொருந்திய துரைத்தன வக்கீல் என்னை யொரு கெட்டிக்கார லாயரை யமர்த்திக்கொள்ளச் சொன்னார். நீர் அந்த வேலையை யேற்றுக்கொள்கிறீரா.

அச்சு:—நீ யுண்மையாகவே அப்படி விரும்புகிறாயா?

இலக்ஷ்:—ஆம். இன்றேல் ஏன் கேட்கிறேன்.

அதற்குள் அம்புஜம் அச்சுதம்பிள்ளையை நோக்கி, "என் மயங்குகிறாய்?" என்றாள்.

அச்சு:—"நான் மனம் விட்டுக் கூறட்டுமா? என்று மெது வாய்க் கூறினான்.

இலக்ஷ்:—அது அவசியமல்ல. நீர் என்ன கூறுவீரென்று எனக்குத் தெரியும். என்னைக் காப்பாற்றுவது கடினம் அல்லது அசாத்தியம் என்று நினைக்கிறீர்.

அச்சு:—"இல்லை யில்லை. அப்படிக் கூறவில்லை. நான் உனக்காக வாதிக்க ஒப்புக்கொள்கிறேன்" என்றான்.

பிறகு அவனும் அம்புஜமும் வீட்டிற்குச் செல்லும் போது அம்புஜம், "நீ எப்படியும் இலக்ஷ்மணனை மீட்டி விடுவாயல்லவா?" என்றாள்.

அச்சு:—"நீ கருதுவது தவறு. அவனைக் காப்பாற்றுவது முடியாத காரியம்" என்றான்.

அம்புஜம் திடுக்கிட்டு:—என்ன? அவன் தண்டனை யடைவான் என்று கூறுகிறாய்.

அச்சு:—மற்றபடி எப்படித் தப்புவான். ஆகாத காரியத்தை நான் மட்டும் எப்படி செய்வேன். அன்னியர் செய்யக்கூடியதைவிட நான் அதிகமாய்ச் செய்யலாம் அவ்வளவே.

அம்பு:—"நான் உனக்கு வாக்களித்ததை நினைத்துக் கூடவா இப்படிக் கூறுகிறாய்?

அச்சு:—ஆ! நினைக்கும்போது நான் எத்தகைய அபூர்வமான காரியத்தையும் செய்து விடுவேனென்று கருதுகிறேன். ஆம். எப்படியாவது அவனைக் காப்பாற்றத் தக்க வேலையைச் செய்தேதீருவேன் - ஆம் அவசியம் செய்வேன்" என்றான்.

அம்புஜத்திற்கு உண்மையில் அச்சுதம் பிள்ளையின் மேல் இருந்தது நட்பும் அவன் தொழில் முறைமையிலிருந்த

சாமார்த்தியத்தில் மதிப்புமேயன்றிக் காதலல்ல. அவளுடைய காதல் உண்மையில் இலக்ஷ்மணன்மேல் தான் இருந்தது - ஆனால் இலக்ஷ்மணன் எல்லம்மாள் மேல் காதல் கொண்டிருக்கிறான் என்று அவள் எண்ணியிருந்தாள். ஆனால் அச்சுதம்பிள்ளையிடம் களங்கமின்றி உண்மையான தன் மனோபாவத்தைக் கூறினாள். தான் காதல் கொண்டவனைக் காப்பாற்ற வேண்டுமென்பது அவள் நோக்கம். ஆகையால் அதற்குக் கூலியாகத் தன் காதலை அச்சுதம் பிள்ளைக்கு விற்றுவிடத் துணிந்தாள். தான் காதல் கொண்ட மனிதனைக் காப்பாற்றவே அப்பொய்க் கடிதத்தை - அம்மையப்பனைப்பற்றியதை - எழுதிவைத்து அது தன் சிற்றப்பன் பெட்டியிலிருந்து அகப்பட்டதென்று சாதித்தாள்.

---

## 17-வது அத்தியாயம்.

மறுமுறை அச்சுதம்பிள்ளை அம்புஜத்தினிடம் வந்தபோது முகவாட்டத்தோடு, "இந்த விஷயத்தையெப்படி நிறைவேற்றுவதென்று எனக்குப் புலப்படவில்லை. நீ கண்டுபிடித்த அக்கடிதவிஷயம். ஏனெனில் எப்படியாவது அதைப்பற்றி சந்தேகம் உண்டாகி விடுமென்றே நம்புகிறேன்" என்றான்.

அம்புஜம் கடுகடுத்த முகத்தோடு, "அப்படியாயின் நமது கலியாண ஒப்பந்தம் இரத்தாய்விட்ட மாதிரியே. இலக்ஷ்மணனை நீ காப்பாற்றுவது என்ற ஒரே நிபந்தனையின்மேல் தான் உன்னை மணம்புரிய ஒப்புக்கொண்டேன். இப்போது அவனைக்காப்பாற்ற உன்னால் முடியாதாயின் நமது ஒப்பந்தம் முறிந்துவிட்டமாதிரியே" என்றாள்.

அச்சு:—நான் வேறு வழியாக அவனை மீட்டுவிடுகிறேன் -

ருசுவில்லை என்று காரணம்காட்டி விடுதலை யடையச் செய்கிறேன்.

அம்பு:—எப்படியாவது செய் - அது உன்பாரம். எப்படி யாயினும் அவனைக் காப்பாற்றிவிட்டால்தான் நான் உன்னைக் கலியாணம் செய்துகொள்வேன். இல்லா விட்டால் இல்லை. இவ்வளவே.

அச்சு:—ஆ! உனக்காக எதைவேண்டுமாயினும் செய்வேன். ஆம் எத்தகைய காரியமாயினும் செய்வேன். நீ என்னையே மணம் செய்துகொள்ள வேண்டும். உனக்காக நான் எதையும் செய்வேன். நான் கூறுவது தெரிகிறதா? நீ அவனைப்பற்றி இவ்வாறு கூறும்போது என் மனம் எப்படியிருக்கிறது தெரியுமா?

அம்பு:—நான் உன்னிடம் உண்மையைக் கூறினேன். எதையும் மறைத்துக் கூறவில்லை.

அச்சு:—அது உண்மையே. ஆனால் இன்னொருத்திமேல் காதல்கொண் டிருப்பவனை நேசிப்பது உனக்கு வெட்கமாக இல்லையா?

அம்பு:—அவன் எல்லம்மாளை நேசித்தால் நேசிக்கட்டும். அவள் என் சிற்றப்பனை உண்மையில் காதலிக்க வில்லை. பொருளுக்கே அவரை மணம்புரிய விரும்பினாள். அவள் இலக்ஷ்மணன்மேல் காதல்கொண் டிருந்தால் இருவரும் சுகமாக விருக்கட்டும். அதைப்பற்றி எனக்கு அவசியமில்லை. என் வரையில் அவனைக் காப்பாற்றிவிட வேண்டுமென்பதே.

அச்சு:—ஆ! நீ மிக்க உத்தமகுணமுடையவள். உன்னை நான் இழந்துவிடமாட்டேன். நமது கலியாண ஒப்பந்தத்தைப் பகிரங்கப்படுத்துகிறேன்.

அம்பு:—ஒரு காலும் உதவாது. நீ யின்னும் உன் நிபந்

தனையை நிறைவேற்றவில்லை யென்பதை மறந்து விட்டாய் போலிருக்கிறது.

அச்சு:—இல்லை யில்லை. நான் மறக்கவில்லை.

அம்பு:—சரி. இலக்ஷ்மணனை நிரபராதி யென்று ருசுப் படுத்தி விடுதலையடையச் செய்யுமுன் இந்த விவகாரத்தைப்பற்றிப் பேசவேண்டாம்.

அதைக் கேட்டதே அச்சுதம் பிள்ளையின் புருவங்கள் சுருங்கி விட்டன. ஆயினும் அவன் முறையிட ஒரு காரணமுமில்லை. அம்புஜம் தனக்கு அவன்மேல் காதல் இல்லை யென்றும், இலக்ஷ்மணன்மேலேயே காதல் என்றும் தெளிவாய்க் கூறிவிட்டிருக்கிறாள். ஆகையால் அவன் அம்புஜத்தின்மேல் குறைகூற ஒரு காரணமுமில்லை.

இதைவாசிக்கும் நேயர்கள் இங்கு சற்றுக் கவனிக்கக் கோருகிறோம். பகிரங்கமாகத் தான் இன்னொருவன்மேல் காதல்கொண் டிருப்பதாய்ப் பன்முறை கூறுவதோடு உன் மேல் எனக்குக் காதலில்லை என்று கூறும் ஒரு கன்னிகையை மணம் புரியக்கருதும் ஒருமனிதன் எத்தகைய மனிதனாக விருக்கவேண்டும்? அவன் சாமார்த்தியமான வக்கீலாக விருந்தாலென்ன? எப்படியிருந்தாலென்ன? அதனால் அவன் கல்வி யவன் அறிவைப் பிரகாசிக்கச் செய்ய வில்லை யென்றும் அவன் சுபாவம் இயற்கையில் மிருக சுபாவமே யென்றும் நன்றாய்த் தெரிகிறது. அதோடு தனக்கு ஒருவன்மேல் காதலிருக்கிறது என்று வெளிப்படையாய்க் கூறிவிட்டு அவனைக் காப்பாற்றுவதற்காகத் தனக்குக் காதலில்லாத இன்னொருவனை மணம் புரிய ஒப்புக்கொள்ளும் ஒரு கன்னிகையின் ஆசாரம் எத்தகையதென்று கருதற்பாலது? இவ்வாறு காதலைப்பற்றி வெளிப்படையாகப் பேசும் ஒரு ஸ்திரீக்கு அச்சம் மடம் நாணம் என்ற குணங்களிருப்பதாகக் கருதலாகுமோ? எவ்வாறிருக்கும்? மேல்

நாட்டார் ஜடசாத்திரத்தில் மட்டுமே பயிற்சி யுடையோர்; மனோதத்துவ சம்பந்தமான சூக்கும ஆராய்ச்சியவர்களிட மில்லை. ஒரு மாதின்மேல் காதல் கொண்ட புருடன் அவளை நினைப்பதனால் கூட அச்சுகத்தைக் கொஞ்சம் அனுபவிக்கிறான். அதனாற்றான் தன் பத்தினி யொழிந்த மற்ற மாதரைக் காம இச்சையோடு கருதுவதும் பாபம், என்று நமது நூல்கள் கூறுகின்றன.

அதற்குமேல் மாதரைக் காண்பதிலும், அவர்களோடு சம்பாஷிப்பதிலும் கூட ஒருவன் சுகமடைகிறான். அவர்கள் தேகத்தின் எப்பாகத்தையேனும் தொடுவதினாலும் சுகமடைகிறான். இருவருடைய தேக சம்பந்தத்தாலும் உண்டாகும் சுகம் முடிவானது. மேல் நாட்டாருடைய கொள்கை தேக சம்பந்தமே ஸ்திரீயாலடையும் சுகம் என்பது. இது மிருக சுபாவமான உணர்ச்சியே யாகும். நமது நாட்டில் இன்னொருவன்மேல் காதல் கொண்டிருக்கிறாள் என்று தெரிந்த ஒரு கன்னிகையை யொருவன் மணம் புரிய விரும்புவானோ? அந்தோ! இவற்றில் எது நாணயமான உயர்ந்த நாகரீகம் என்பதை யறிவாளிகளே சிந்திக்கலாகும். இத்தகைய நாகரீகத்தை விட்டு மேல் நாட்டு நாகரீகத்தைப் பின்பற்ற வேண்டுமென்று கருதும் அறிவாளிகளின் புத்தியைப்பற்றி யென்னென்று கூறலாம். இந்தத் தவறான மயுக்கம் நம்மவரை எப்போது விட்டொழியுமோ அப்போதான் நாம் சீர்படுவோம். இனி கதையைத் தொடங்குவோம்.

மறுநாள் திருவேங்கடம் அம்புஜத்தைக் காண வந்து இருவரும் சம்பாஷித்துக்கொண் டிருக்கையில் வாலிபன், "ஆம் அம்மா. அச்சுதம்பிள்ளை பள்ளூரில் எனக்கு ஒரு வேலை பார்த்துவைத்தார். நல்ல சம்பளம் கிடைக்கும். எனக்கு இச்சமயம் இந்த விவகாரத்தை விட்டுச் செல்ல

மனமில்லை. ஆயினும் நல்ல வேலையை விட்டுவிடலாகா தென்று போகப்போகிறேன். உன்னிடம் கூறிவிட்டுச் செல்லவே வந்தேன்'' என்றான்.

அம்புஜம் "மிக்க நல்லது. அச்சுதம்பிள்ளை யுனக்கு நல்ல வேலையே ஏற்பாடு செய்தார். நீ யதில் க்ஷேமமாய் விர்த்தி யடைவாய் என்று நம்புகிறேன்'' என்றாள்.

திரு:—"ஆம் அம்மா. ஆயினும் இந்தக்கொலை விஷயத் தைப்பற்றி இங்கிருந்து ஏதேனும் உதவி செய்யக்கூடு மாயின் எனக்கு அப்படிச் செய்ய மிக்க விருப்பம்'' என்றான்.

அம்பு:—"ஆம். நீ என் விஷயத்தில் அவ்வளவு அக்கரை காட்டுவதற்காக நான் மிக்க வந்தனமளிக்கிறேன். ஆனால் உன் போன்ற சிறுவன் இத்தகைய விஷயத் தில் எனக்கு உதவி செய்வது முடியாத காரியம் என்று நினைக்கிறேன். ஆதலின் நீ பேசாமல் அந்த வேலையில் போய்ச் சேர்வதே நலம் என்று நினைக் கிறேன்'' என்றாள்.

திருவேங்கடம் "ஆம் ஆம் அம்மா. நீ கூறுவது தான் சரி. ஆனால் உனக்குப் பிரியமாயின் உன்னை யொன்று கேட்கவேண்டுமென்று எனக்கு விருப்பம். அதாவது நான் என் எஜமான்மேல் உண்மையாகவே மிக்க அன்பு வைத்திருந்தேன். அவர் ஞாபகார்த்தமாக அவர் கையாண்ட பொருள்களில் ஏதேனுமொன்று எனக்கு அளிப்பதாயின் மிக்க நன்றி யுடையவனாக விருப் பேன்'' என்றான்.

அம்புஜம் "ஆகா அப்படியே யளிக்கிறேன். இதோ அவர் கடித உறைகளை யறுக்கும் வெள்ளிக்கத்தி யிருக் கிறது. இது அவர் தினம் உபயோகித்து வந்தது. இதை வைத்துக்கொள்'' என்று கூறிக்கொண்டே மேஜை

மேலிருந்த அக்கத்தியை யெடுத்து வாலிபனிடமளித்தாள்.

திருவேங்கடம் அதை வாங்கிக்கொண்டு "ஆகா மிக்க சந்தோஷம்-மிக்க வந்தனமளிக்கிறேன். விடை பெற்றுக் கொள்கிறேனம்மா" என்றான்.

அச்சமயம் அவன் முகத்திலுண்டாகி யிருந்த ஒருவித மான குறியைக்கண்டு அம்புஜம் "திருவேங்கடம்! நீ யிதைக் கேட்க விரும்பவில்லை" என்றாள்.

திரு:—ஆம் அம்மா-நான் வேறொன்றைக் கேட்க விரும் பினேன்.

அம்பு:—ஏன் அதைக் கேட்கவில்லை.

திரு:—அம்மா! சில சமயங்களில் நான் ஒன்றைக் கூற விரும்பினால் என்னை யறியாமலே வேறொன்று என் வாயில் வந்து விடுகிறது. என்னாலதைத் தடுக்கக் கூடவில்லை. ஆனால் பின்னால் அதனால் நன்மை யுண் டாகிறதே யன்றி கெடுதியாய் முடிவதில்லை.

அம்பு:—அச்சுதம்பிள்ளை யப்படிக் கூறவேண்டாமென்று உனக்குப் புத்தி புகட்டினாராமே.

திரு:—"ஆமாம். ஆனால் அது ஒவ்வொரு சமயம் தான் நேர்வது. ஆயினும் அது தற்செயலாக வருவது- எந்நேரமும் வேண்டுமென்று பொய் கூறுவதல்ல. அதனால் நன்மையே யிருக்கிறது. உலக அனுபவம் அவ்வளவாகத் தெரியாத மாதர்களுக்கு அதைப் பற்றி விளங்காது. அதற்கெல்லாம் வேளை யிருக் கிறது. அப்போதுதான் அப்படிச் சம்பவிக்கும். சரி, இக்கத்தியை நான் வைத்துக்கொள்ளலா மல்லவா?" என்றான்.

அம்பு:—தடையின்றி எடுத்துச் செல். இனி பொய்க்கதை கூறாதே யென்று இது உனக்கு நினைப்பூட்டுவதாக விருக்கட்டும்.

திரு:—"மிக்க வந்தனம். ஆனால் நான் அப்படிக்கூறுவது பொய்க்கதையல்ல. அது தற்செயலாக நேர்வதாயினும் பின்னால் அது காரியார்த்தமாகவே சம்பவித்ததென்று தெரியவரும். மிக்க வந்தனம் போய் வருகிறேன்" என்று கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டான்.

அம்புஜத்திற்கு அவன் கூறியவையாவும் உண்மையேயென்றும், அவன் பூரணமாக நம்பத்தகுந்த வாலிபனென்றும் மனதிற் புலப்பட்டது. சற்றுநேரங் கழித்து அம்புஜம் எல்லம்மாளைக் கண்டபோது திருவேங்கடம் வந்து சென்றதைக்கூறி, "அவன் ஒரு வேடிக்கையான நல்ல சிறு பையன்" என்றாள்.

எல்லம்மாள், "அகோரமான சிறிய புளுகுப்பேய். அவன் பள்ளூருக்கு ஒழிகிறானென்று நான் மிக்க சந்தோஷமடைகிறேன். நீ அவனிடம் மிக்க நெருக்கமான பழக்கம் வைத்துக்கொண்டாய். அவன் பெரிய அதிகப்பிரசங்கி. அவனை இந்த வீட்டிற்கு வரவேவிடக்கூடாது" என்றாள்.

அம்புஜம், "எல்லம்மா! போதும். அவன் இனியிங்கே வரமாட்டான். ஆகையால் நீ யவ்விஷயத்தில் கலக்கமடையவேண்டாம்" என்றாள். அதன்பிறகு இருவரும் நடக்கும் விவகாரத்தைப்பற்றியும், முக்கியமாக இலக்ஷ்மணன் சிறை செய்யப்பட்டதைப் பற்றியும் பேசத்தொடங்கினார்கள்.

அம்புஜம், எல்லம்மாளுக்கும் இலக்ஷ்மணனுக்கும் இருக்கும் பழைய சினேகத்தைப்பற்றிப் பேசலாகாதென்று எண்ணிக்கொண்டாள். ஏனெனில் இலக்ஷ்மணனைக் காப்பாற்ற இருவரும் ஒன்று சேர்ந்தார்கள். எல்லம்மாளிடம் சினேக பாவமாகவேயிருந்து அவள் விஷயங்களை யறிந்து

கொள்ள வேண்டுமென்று அம்புஜம் தீர்மானித்துக்கொண்டாள். ஆகவே இவர்கள் ஒவ்வொருவேளை மணிக்கணக்காகப் பேசிக்கொண் டிருப்பார்கள். அப்படி யிருந்தும் ஒரு சமயத்திலாவது எல்லம்மாள் இலக்ஷ்மணனைத் தென்னூரில் தான் கண்டிருப்பதாய்க் கூறவேயில்லை. ஆயினும் அது நிச்சயமென்றும் எப்படியேனும் இலக்ஷ்மணன் மூலமாகவே அதை யறியவேண்டுமென்றும் எண்ணியிருந்தாள்.

அம்புஜத்திற்கு இலக்ஷ்மணனிடம் தனியேபேச சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. சிறைச்சாலையில் அவனைக்காணச் சென்றபோதெல்லாம் அச்சுதம்பிள்ளை கூடவே வந்து கொண்டிருந்தான். மேலும் இலக்ஷ்மணன் சிடுசிடுப்பாகவே யிருந்தான். அவன் முதலில் சிறையாக்கப் பட்ட போது இருந்த அசட்டுத்தனம் பிறகு முதல் விசாரணையில் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டபோது இல்லை. விசாரணை முடிய பல நாட்களாயின.

ஒருபகல் யாரோ ஒருமாது அம்புஜத்தைக் காண வேண்டுமென்று வந்தாள். அம்புஜம் அவளை ஒருபோதும் கண்டதில்லை. அவள் நடுவயதுள்ளவளாகவும் ஏழையாகவும் காணப்பட்டாள். ஆனால் நாணமும் மரியாதையுமுடையவள். அவள் கண்கள் அன்று பிரகாசம் பொருந்தியவைகளாக விருந்தன. அவசியமானவரையில் மட்டுமே பேசுகிறவள். அவள், "அம்மா என்பெயர் பாலம்மாள்" என்றாள்.

அம்பு:—"சரிதான். என்னால் உனக்கு என்ன காரியம் ஆகவேண்டும்?" என்று கேட்டாள்.

அதற்கு அம்மாது, "எனக்கு வேண்டியது ஒன்றுமில்லை. நான் உனக்கு உதவிசெய்ய இங்கு வந்தேன். பயப்

பட வேண்டாம். உனக்காவது உன்னைச் சேர்ந்தவர்களுக்காவது நான் தீங்கு நினைப்பவளல்ல. அதற்கு மாறாக உனக்கு உதவிகொண்டுவந்தேன்" என்றாள்.

அம்பு:—"எந்த வழியில் எத்தகைய உதவி? நீ கூறக் கருதியதைக் கூறு" என்றாள்.

பால:—"நான் உன் சிறிய தந்தையின் மரணத்தைப் பற்றிய விஷயத்தில் உதவிசெய்ய வந்தேன். நான் உன்னை யறிந்ததில்லை யெனினும், இப்போது நடக்கும் விவகாரங்களைப்பற்றியும் உன் மனக்கலக்கமான நிலைமையைப்பற்றியும் அறிவேன். நான் கூறுவதென்னவெனில் நீ மீனாட்சியம்மாளிடம் சென்றால் இந்த மர்மத்தைப்பற்றிய உண்மையை யறியலாகும்" என்றாள்.

இதைக்கேட்ட அம்புஜம் சற்று வெறுப்போடு அவளை நோக்கினாள். "ஓகோ! இவள் யாரோ குறி சொல்கிறவளிடம் நம்மை யழைத்துப்போகத் தூதாளாய் வந்திருக்கிறாள்" என்று எண்ணிக்கொண்டு பாலம்மாளை நோக்கி, "நீ என் விஷயத்தில் சிரத்தை யெடுத்துக்கொண்டதற்காக மிக்க வந்தனம். ஆனால் குறி கூறுகிறவளிடம் போக எனக்கு விருப்பமில்லை. அதில் எனக்கு விருப்பமில்லை" என்றாள்.

பால:—"மீனாட்சியம்மாள் குறி சொல்கிறவளென்று நான் கூறவில்லை. அந்தம்மாள் அஸ்தரேகைகளையும் கிரகங்களையும் பார்த்து உண்மையைக் கூறுபவள். இப்போது குற்றம் சாட்டப்பட்டிருக்கும் இலக்ஷ்மணன் என்பவனைக் காப்பாற்ற உனக்கு விருப்பமிருந்தால் அந்தம்மாளிடம் செல். அந்தம்மாள் உண்மைக் கொலையாளியைக் கண்டுபிடிக்கும் வழியைக் காட்டு

வாள். உண்மைக் கொலையாளி இலக்ஷ்மணன் என்ற பெயருடையவனல்ல. அல்ல அல்ல" என்றாள்.

அம்பு:—உன்னைப்பார்த்தால் மோசக்காரியாய்த் தோன்ற வில்லை...

பாலம்மாள் சாந்தமாகவே, "அல்ல நான் மோசக் காரியல்ல. நான் ஒரு சாதாரணமான ஸ்திரீ. உபாத் தினி வேலையிலிருந்தேன். இப்போது சும்மா இருக்கிறேன். நீ பேசாமல் நான் கூறியபடி மீனாட்சியம்மாளிடம் செல். உண்மையை யறிந்துகொள்வாய். இன்றேல் ஒருபோது மறியமாட்டாய். அதோடு என் வார்த்தைப்படி நடக்காத தற்காக பிறகு மரணபரியந்தம் வேதனைப்படுவாய். அவ் வளவே சங்கதி - நான் கூறவேண்டியதைக் கூறிவிட்டேன். இனி நன்மையும் தீமையும் உன் கையிலேயே யிருக்கின் றன. பிரியப்படி செய்" என்று கூறிவிட்டுச் சட்டென்று போய்விட்டாள்.

அவள் போய்விட்டதே, "அடடா நாம் என்ன முட் டாள்தனம் செய்துவிட்டோம்! இவள் உண்மையான வளே" என்று அம்புஜத்தின் மனதிற்பட்டது. இப்போ தென்செய்வது? அந்த மீனாட்சியம்மாள் இருக்குமிடம் எப்படி யறிவது? என்று சிந்தித்துக்கொண்டே யிருந்த போது மேஜையின்மேல் ஒரு சீட்டு இருப்பதைக் கண் டாள். உடனே அது பாலம்மாள் வைத்துவிட்டுச் சென்ற தென்று தெரிந்துகொண்டு அதை எடுத்துப்பார்த்தாள். அதில் மீனாட்சியம்மாளின் விலாசம் இருந்தது. சற்று நேரம் சிந்தித்தபின் ஒருவருக்கும் கூறாமல் புறப்பட்டாள்.

மீனாட்சியம்மாள் இருக்கும் வீடு ஒரு நாணயமான வீதிலேயே யிருந்தது. அம்புஜம் அவ்வீட்டின் மாடிமே லேறி விலாசத்தில் குறிக்கப்பட்ட எண்ணுள்ள அறைக் குச் சென்றாள். அந்த அறை ஒரு சாதாரண அறை

போலவே அலங்கரிக்கப்பட்டிருந்தது. வருவோர்க்குப் பிரமை புண்டாக்கத்தக்க விவகாரம் ஒன்றுமேயில்லை. இரண்டொரு நிமிடங்களில் மீனாட்சியம்மாள் அம்புஜத்தின் எதிரில்வந்து அவளை யொரு ஆசனத்திலிருக்கச் செய்தாள். அம்மாது பாலியப்பருவமே. சாதாரணமான ஒரு நீண்ட அங்கி அணிந்துகொண் டிருந்தாள்.

அம்மாது அம்புஜத்தை நோக்கி, "உன் சங்கதிகளைக் கூறவேண்டுமா?" என்றாள். அம்புஜம் எனக்கு வேண்டிய ஒரு சங்கதியைக் கூறுவதாயின் கூறுங்கள் என்று ஒரே வார்த்தையாய்க் கூறிவிட்டாள்.

**மீனாட்சியம்மாள்:**—"ஆகா கூறக்கூடும். அப்படியாயின் மையில் பார்த்துதான் கூறவேண்டும்" என்று ஒரு கண்ணாடியில் ஒருவித மைதடவி அதை மேஜைமேல் வைத்துச் சற்றுநேரம் உற்று நோக்கிக்கொண் டிருந்தாள்.

அம்புஜம் பேசாமல் பார்த்துக்கொண் டிருந்தாள். அம்மாது உண்மையானவள் என்று புலப்பட்டது. அவள் தனக்கு ஏதோ அபூர்வசக்தி யிருப்பதாக எவ்வித அபிநயமும் செய்யவில்லை. சற்றுநேரங்கழித்து அம்மாது தலை நிமிராமலே, "ஆ! ஒரு வாலிபமனிதன் இருக்கிறான். அவன் உனக்கு மிக்க பிரியமானவன். அதற்குமேல் அவனைப்பற்றிய விவரம் கூறமுடியாது. அவன் என்ன செய்தானென்றும் கூறமுடியாது. ஆனால் அவன் பிராணபத்திலிருக்கிறான் என்பது நிச்சயம். ஒகோ! அவன் அதிலிருந்து தப்பிக்க மார்க்கமிருக்கிறது. ஆ! ஒரு மனிதன் இருக்கிறான். அவன் ஒருவனே யவனைக்காப்பாற்றக் கூடியவன். ஆம் ஆம். ஆலசியம் செய்யாமல் அந்த மனிதனை வரவழை. ஆலசியம் செய்யால் கூப்பிடு" என்றாள்.

"அம்புஜம் அம்மனிதன் யார்?" என்றாள். மீனாட்சி

யம்மாள், "ஆ! அவன் யாரென்று தெரிகிறது. அவன் பெயர் ஆனந்தலிங். அவன் பிரசித்திபெற்ற துப்பறிபவன். அவன் இவனை யாபத்தினின்றும் மீட்டுவிடுவான். ஆனல் அவனைச் சீக்கிரம் வரவழைக்கவேண்டும்" என்ருள்.

அம்புஜம் அவன் எங்கிருப்பவன் என்ருள்.

அதற்கு அம்மாது:—அவன் நகரத்திலிருக்கிருனே இச்சமயம் நாட்டிலிருக்கிருனே. ஆனல் அவன் ஒருவனே அம் மனிதனைக் காப்பாற்றக் கூடியவன்.

அம்புஜம், "அவன் துப்பறிபவன்; அவனை எவ்வாறு நான் கூப்பிடுவது; என்கூட இருப்பவர்கள் இன்னொரு துப் பறிபவனைக் கூப்பிட உடன்பட மாட்டார்களே. என்ன செய்வேன். அவனை யன்றி அந்த ஆளைக்காப்பாற்ற வேறு வழி யில்லையோ?" என்ருள்.

மீன:—"வேறு யாராலும் அவனைக் காப்பாற்ற முடியாது. அவன் ஒருவனே காப்பாற்றக் கூடியவன். நீ யுடனே யவனை வரவழை. அவ்வாறே வாக்குத்தத்தம் செய்கிருயா?" என்ருள்.

அவள்முன் அம்புஜம் மறுத்துக்கூற முடியவில்லை. ஆகா அப்படியே வாக்குத்தத்தம் செய்கிறேன்" என்ருள். மீனுட்சியம்மாள், "சரி. அதன்படி நடக்கத் தவிராதே. டெலிபோன் இருக்கும் காரியாலயத்தில் போய்ப் பார்த்தால் அவன் விலாசம் கிடைக்கும். அதை யறிந்துகொண்டு அவனுக்குக் கடிதம் எழுது. நீ யவனைச் சந்தித்துக் கலந்து பேசி யிந்த விவகாரத்திற்கு அவனை யேற்பாடு செய்கிற வரையில் ஒருவரிடமும் - எப்படிப்பட்டவர்களிடமும் இதைக் கூருதே" என்ருள்.

அம்பு:—அவனுக்கு அதிக செலவு பிடிக்குமோ?

மீன:—இத்தகைய விவகாரத்திற்குச் சாதாரணமாய் பிடிப்

பதுதான் பிடிக்கும். ஆயினும் சற்று சுமாரான நிலைமையிலிருப்பவர்களுக்கு முடியாத காரியமல்ல.

அம்பு:—"அப்படியாயின் என்னிடம் வேண்டிய பொருள் இருக்கிறது" என்று கூறிவிட்டு அம்மாதுக்குத் தட்சணை யளித்து விடைபெற்றுச் சென்றாள்.

---

## 18-வது அத்தியாயம்.

அம்புஜம் ஆனந்தலிங்கைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறாள். இப்போது எக்காரணத்தாலோ மீனாட்சியம்மாள் கூறியபடி செய்யவேண்டுமென்று அவள் மனதிற் புலப்பட்டது. அவள் நேராய் டெலிபோன் இருக்கு மிடத்திற்குச் சென்றாள். அங்கு பார்த்தபோது ஆனந்தலிங்கின் விலாசம் கிடைத்தது. ஆனால் மீனாட்சியம்மாள் கடிதமே யெழுதவேண்டு மென்று கூறியிருக்கிறாள். அதோடு இரகசியமாய் ஒருவருக்கும் தெரியாமல் எழுதும்படி கூறினாள். ஆகையால் அங்கேயே யுட்கார்ந்து இதைக்கண்டு பிடிக்கும் வேலையை யேற்றுக்கொள்ள வேண்டுமென்றும் உடனே வரவேண்டுமென்றும் வரைந்தாள்.

அம்புஜம் சிறைச்சாலைக்குச் செல்லும் போதெல்லாம் கூட அச்சுதம் பிள்ளை யிருந்துகொண்டே யிருந்தான். ஒரு நாள் தெய்வ சங்கல்பமாய் அம்புஜம் இலக்ஷ்மணனிடம் பேசிக்கொண் டிருக்கையில் சிறைச்சாலைக் காவலன் அவர்களை விட்டு விட்டு எட்ட ஒரு வேலையாய்ச் சென்றான். அப்போது முகவாட்டத்தோ டிருந்த இலக்ஷ்மணன் அம்புஜத்தை நோக்கி "நான் உன்மேல் காதல் கொண்டிருக்கிறேன் என்று இப்போது உனக்குத் தெரிந்தது என்று நம்புகிறேன்" என்றான். அம்புஜத்தின் முகத்தில் உண்

டான பிரகாசத்தால் அவள் உணர்ந்தாள் என்று அவன் அறிந்து கொண்டு,

"அதைப்பற்றி அதிகமாகக் கருதாதே, என்மனதை வெளியிட்டேன். அவ்வளவே, அதற்குமேல் ஒன்றுமில்லை" என்றான்.

அம்புஜம் "ஏன் அதற்குமேல் ஒன்றுமில்லை?" என்றாள். இலக்ஷ்மணன் "ஏனெனில் முதலாவது நான் இப்போது தண்டிக்கப் படும் நிலைமையிலிருக்கிறேன். இரண்டாவது அப்படித் தப்பித்துக் கொண்டாலும், என்னை மணம் புரியும்படி யுன்னைக் கேட்கமாட்டேன். ஏனெனில் அப்படிச் செய்வதால் நீ செல்வத்தை யிழந்து விடுவாய்" என்றான்.

அம்புஜம்:—செல்வத்தைப்பற்றி யெனக்கு அக்கரையில்லை. ஆனால் அச்சுதம்பிள்ளை யுன்னைக் காப்பாற்றுவதாயின் அவனை மணம் புரிவதாய் வாக்களித்திருகிறேன்.

இலக்ஷ்மணன்:—அடடா! என்ன பேரம், நான் அத்தகைய பேரத்தால் காப்பாற்றப்பட ஒப்புக்கொள்வேன் என்று நீ கருதுகிறாயா? நீ அவனைக் காதலிக்கிறாயா?

அம்பு:—இல்லை. நான் உன்னையே காதலிக்கிறேன். அவனிடம் அப்படியே கூறிவிட்டேன். ஆயினும் அவன் நான் தன்னை மணம் புரிவதானால்தான் உன்னைக் காப்பாற்றுவதாய்க் கூறுகிறான். அதனால் வாக்களித்தேன்.

இலக்ஷ்:—வாக்களித்தாயா? இத்தகைய சந்தர்ப்பத்தில் அளித்தவாக்கு காசுக்கும் செல்லாது. அவன் உதவியின்றியே நான் தப்பித்துக் கொள்வேன். நீ என்னையே மணம் புரிவாயல்லவா?

அம்பு:—அவன் தவிர வேறொருவரால் உன்னைக் காப்பாற்ற

முடியாதாம். நீ குற்றம் செய்திருந்தாலும் இல்லாவிடினும் அவன் உன்னைக் காப்பாற்ற முடியும் என்கிறான்.

இலக்ஷ்:—அப்படியா கூறினன்? மற்ற வக்கீல்களும் அதைச் செய்யக் கூடும்.

அம்பு:—எப்படி முடியும்? சிற்றப்பா உனக்கு வைத்த பணம் உனக்குக் கிடைக்காதாமே. நீ எப்படி வக்கீலை யமர்த்திக் கொள்வாய்?

இலக்ஷ்:—நான் கூறுவதைக்கேள். என் சுரங்க விஷயம் நிலையாய் விட்டது. அது மிக்க இலாபகரமானதென்று யாவருமறிவார்கள்.

அம்பு:—அதற்கு எப்படி பணம் கட்டினய்?

இலக்ஷ்:—எல்லம்மாளிடம் வாங்கினேன். அவள் இத்தகைய பேரத்தின் நுட்பமறிந்தவள். நல்ல இலாபம் கிடைக்கு மென்று உணர்ந்து உதவினள்.

அம்பு:—நீ யவள் மேல் காதல் கொண்டிருக்கிருயென்று கருதினேன்.

இலக்ஷ்:—சே சே! இல்லை யில்லை. அவள் உண்மையாகவே உன் சிற்றப்பாவின் மேல் பிரியம் வைததிருந்தாள். யுக்திசாலி யாதலின் நல்ல இலாபம் கிடைக்குமென்று ஆசைப்பட்டே பணம் கொடுத்தாள். எங்கள் இருவர்க்கும் அவசியம் நல்ல செல்வம் கிடைக்கும். உனக்குக் கிடைக்கக்கூடிய அவ்வள வில்லாவிடினும் நான் போதுமான ஆஸ்தி யுனக்கு வைக்கக்கூடும். நீ யுண்மையில் என்னை விரும்புகிருயல்லவா?

அம்புஜம் கண்ணீர் விட்டுக்கொண்டே "ஆயினும் நான் அச்சுதம்பிள்ளைக்கு வாக்களித்து விட்டேனே அவன் உதவியின்றி நீ மீளமாட்டாயே" என்ருள்.

இலக்ஷ்:—மிக்க புத்தி சாதுரியம் உடைய வக்கீல் வேண்டுந்தான்.

அம்பு:—ஏன் அப்படிக் கூறுகிறாய். உன் நிரபராதத் தன்மையால் மீளலாகாதா?

இலக்ஷ்:—"நான் நிரபராதிதானா?" என்றான்.

அதற்குள் சிறைச்சாலைக் காவலன் வந்து நேரமாய் விட்டது என்றதே அம்புஜம் வெளியில் வந்துவிட நேர்ந்தது. இலக்ஷ்மணன் கேட்ட கேள்வி அவள் மனதில் வாதித்துக்கொண்டிருந்தது. "அவன் நிரபராதியாயின் ஏன் அப்படிக் கூறலாகாது. அல்லது குற்றம் செய்திருந்தால் இன்ன சந்தர்ப்பத்தால் அப்படிச் செய்ய நேர்ந்ததென்று ஏன் கூறலாகாது" என்பது அவள் கலக்கம். ஆனால் கடைசியில் இலக்ஷ்மணன் தன்மேல்தான் காதல் கொண்டிருக்கிறான் என்பதை யறியவே அவளுக்கு மிக்க சந்தோஷமுண்டாயிற்று. மற்ற நலமனைத்தும் தானே வருமென்று கருதினாள். இப்போதவன் நிரபராதியென்று அவளுக்கு நிச்சயமாய்ப் புலப்பட்டது. அவன் தன்மேல் காதல்கொண்டிருப்பதால் கொலை செய்திருக்கமாட்டான். நிரபராதி யென்று ருசுப்படுத்தப்படுவான். அச்சுதம் பிள்ளையின் உதவி யில்லாமலே யவனைக்காப்பாற்ற ஒரு வழி கண்டுபிடிக்க வேண்டுமென்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டாள். அதற்கு எப்படி மார்க்கம் என்ற சிந்தனையிலிருந்தாள்.

அன்று மாலை அச்சுதம்பிள்ளை யவளிடம் வந்தான். அம்புஜம் "நான் இன்று இலக்ஷ்மணனைப் பார்த்தேன். அவன் நிரபராதியே" என்றாள்.

அச்சு:—அதை யென்னிடம் கூறுவதைக் காட்டிலும் துரைத்தன வக்கீலிடம் ருசுப்படுத்த உனக்குச் சக்தியிருந்தால் நலமாயிருக்கும். அம்புஜம்! விவகாரங்கள்

186512

திருப்தியாயில்லை. அந்தத் துரைத்தன வக்கீல் எதையோ மறைத்து வைத்துக்கொண் டிருக்கிறான் என்று புலப்படுகிறது. எதையோ வெளியிடக்கருது கிறான்.

அம்பு:—நீ எப்படியாவது இலக்ஷ்மணனைத் தப்புவிக்க முயல்வாயல்லவா?

அச்சு:—என்னால் கூடியவரைச் செய்வேன். நான் மனிதன் றானே. என்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவும் செய்வேன். அதுவரையில் நீ நம்புகிறாயல்லவா?

அம்பு:—ஆகா நம்புகிறேன்.

அச்சு:—ஏன் என்பதும் உனக்குத் தெரியுமல்லவா?

அம்பு:—மெதுவாய் ஆம் என்றாள்.

அச்சு:—ஏனெனில் அவன் நிரபராதி என்றல்ல. உனக்கு வாக்கு அளித்திருப்பதால். அதனால்தான் இதுகாறும் எந்த வக்கீலும் கஷ்டப்படாத விதமாய்க் கஷ்டப்படு கிறேன்.

அம்பு:—நீதவிர வேறெவரும் இலக்ஷ்மணனைக் காப்பாற்ற முடியாதோ?

அச்சு:—இல்லை முடியாது. ஆயிரந்தரம் கூறுகிறேன். முடி யாது. எவன் அசத்தியம், அவமானம் ஒரு சமயம் தண்டனை பாவற்றிற்கும் உட்பட்டு இவ்வேலையிற் பிர வேசிப்பான். நான்றான் உன்மேல் கொண்டிருக்கும் காதலால் இவ்வளவுக்கும் துணிந்து ஒப்புக் கொண் டேன். எப்படியாவது இதில் ஜெயமடைந்தால் உன்னை மணம்புரிவேன் என்ற நிச்சயத்தால் கஷ் டத்தையேற்றுக்கொண்டேன்.

அம்புஜம் திடுக்கிட்டுப் பிரமை யடைந்து, பீதியும் அடைந்தாள். "நாம் யார்? நம்மை இந்த இரண்டு பேரும் ஏன் இப்படியேன் காதலிக்க வேண்டும். இலக்ஷ்மணன்

நம்மேல் காதல் கொண்டிருப்பதாய் மட்டும் கூறுகிறான். அச்சுதம் பிள்ளையோ நமக்காக எத்தகைய குற்றத்தை யேனும் செய்வதாகக் கூறுகிறான்" என்று சிந்தித்தாள். ஆயினும் இலக்ஷ்மணன் தன்மேல் ஆழ்ந்த காதல் கொண் டிருக்கிறான் என்று அவளுக்குத் தெரியும். அவள் "ஆ! நீ மட்டும் இலக்ஷ்மணனை மீட்டிவிட்டால்..." என்றாள்.

அச்சு:—"மீட்டிவிட்டால் என்று கேட்காதே. எப்போது மீட்டுகிறாய்?" என்று கேள்.

அம்பு:—"ஆம். ஆம். நீ அவனை மீட்டிவிட்டால் நான் உன்னை மணம்புரிந்து கொள்வதாகச் செய்த ஒப்பந் தத்தை இரத்து செய்து விடுவாயா? அதற்குப் பதில் என் ஆஸ்தி முழுமையும் உனக்களித்து விடுவதா யின்" என்றாள்.

அச்சு:—அம்புஜம்! உனக்கென்ன புத்தி சபலித்துவிட் டதா? எனக்கு வேண்டியது நீயே யன்றி உன் ஆஸ்தி யல்ல. நீ என்னை மணம்புரியாவிட்டால் அந்த ஆஸ்தி யொரு பொருட்காட்சிச் சாலைக்குச் சேரும்.

அம்பு:—"ஆம். எனக்குத் தெரியும்-நீ மிக்க புத்தி சாமார்த் தியமுடைய ஆள். நீ எப்படியேனும் அந்த மரண சாதனத்தின் நிபந்தனையை யுடைத்துவிடலாம். அல் லது எப்படியாவது..." என்றாள்.

அச்சு:—என்ன? அசத்தியமான காரியம் செய்தா?

அம்பு:—இப்போது இலக்ஷ்மணனை மீட்ட நீ அசத்திய மாகத் துணிய வில்லையோ?

அச்சு:—அப்படியல்ல. இலக்ஷ்மணன் நிரபராதி யென்று எனக்குப் பூரண நம்பகம் இருக்கிறது. ஆனால் சரி யான ருசுவுகள் இல்லாததால் எனக்கு மிக்க கஷ்ட மாக விருக்கிறது.

அம்பு:—ஆயினும் உன்னை மணம்புரிய எனக்குப்பிரியமில்லை.

அச்சு:—சரி. அப்படியாயின் வேண்டாம்.

அம்பு:—ஆயினும் நீ இலக்ஷ்மணனைக் காப்பாற்றிவிடுவாயல்லவா?

அச்சு:—ஒருகாலும் செய்யமாட்டேன். உன்காதலன் தன் முயற்சியாலேயே தப்பித்துக்கொள்ளட்டும். அவன் எத்தகைய முடிவை யடைகிறான் பார்ப்போம்.

அம்பு:—ஓ! இப்படிப் பேசவேண்டாம். இன்னொருவனைக் காதலிக்கும் ஒரு கன்னிகையை நீ மணம்புரிய விரும்பமாட்டாய் என்று கருதுகிறேன்.

அச்சு:—நீ என்னை மணம்புரிய வேண்டுமென்பது என் விருப்பம். உனக்கு இப்போது என்மேல் காதலில்லாவிடினும் பின்னால் உண்டாகும்படிச்செய்ய என்னால் முடியுமென்று நான் அறிவேன். நீ மிக்க சிறியவள். பின்னால் என்மேல் காதல்கொள்வாய்.

அம்பு:—அப்படியாயின் நான் உன்னை மணம்புரிவது என்ற நிபந்தனை யில்லாவிட்டால் இலக்ஷ்மணனைக் காப்பாற்ற மறுக்கிறாய்?

அச்சு:—கண்டிப்பாய் மறுக்கிறேன்.

அம்பு:—சரி. அப்படியாயின் நீ அவனைக்காப்பாற்ற உன்னாலான முயற்சிகளைச் செய். உன் முயற்சியால் அவன் காப்பாற்றப்பட்டால் நமது நிபந்தனைப்படி நான் நடந்துகொள்கிறேன். ஆனால் இன்னொரு விஷயம். நான் உன் உதவியின்றியே யவனைக் காப்பாற்ற முயற்சி செய்கிறேன். எந்த விதமாகவோ என் முயற்சியால் அவன் காப்பாற்றப்பட்டால் நமது நிபந்தனை முறிந்துபோன மாதிரியே.

அச்சு:—பேஷ். உன்னாலான முயற்சியெல்லாம் செய். ஆனால் அதனால் அவனை யின்னும் இக்கட்டில்தான் சிக்கச்செய்வாய். நீ செய்யக்கருதும் முயற்சி என்ன?

அம்பு:—அதைக் கேட்கவேண்டாம். உன் முயற்சியைப் பூரணமாய் நீ செய். அவ்வளவே.

அச்சு:—நீ ஒருபோதும் ஜெயமடையமாட்டாய். ஆயினும் எனக்கு இது பிரியமில்லை. இது நம்மிருவர்க்கும் யுத்த மாய் முடியும்.

அம்பு:—"ஆம். உண்மையே. ஆனால் சூதில்லாத பகிரங்க யுத்தம். நான் பகிரங்கமா யுனக்கு அறிவிக்கிறேன். நீயும் அவனைக் காப்பாற்ற முயற்சிசெய். உன் உதவி யின்றி நானும் முயற்சி செய்கிறேன். என் முயற்சி யால் அவன் காப்பாற்றப்பட்டால் நான் அவனையே மணம்புரிவேன்" என்றாள்.

அச்சுதம்பிள்ளை யுன்னால் முடியாதென்றான். முடியா மற்போனால் நம் நிபந்தனை யிருக்கவேயிருக்கிறது என்றாள் அம்புஜம். அதோடு அச்சுதம்பிள்ளை போய்விட்டான்.

அதன்பிறகு அம்புஜம் பிநாகபாணி கிருஷ்டப்பன் யாரைக்கேட்டாலும் யாவரும், "சரியான ருசுவில்லை. மிக்க சாமார்த்தியமுடைய ஒரு வக்கீலின் வாதத்தால் தான் அவன் தப்பவேண்டுமென்கிறார்கள். இதற்கிடையில் அவள் மீனாட்சியின் பேச்சைக்கேட்டு ஆனந்தலிங்கை வர வழைப்பதில் பயனில்லை யென்றெண்ணிவிட்டாள். ஆயி னும் அச்சுதம்பிள்ளையிடம் சபதம் செய்துகொண்டபின் ஏதேனும் செய்தே தீரவேண்டும். சிந்தித்துச் சிந்தித்துக் கடைசியில் உலகாம்பாளிடம் சென்று திருவேங்கடத்தின் மேல் விலாசத்தைத் தெரிந்துகொண்டு அவனை யுடனே வரும்படிக் கடிதம் வரைந்தாள். எல்லம்மாள் வீட்டிலில் லாத சமயம்பார்த்து அவனை வரும்படி யெழுதியிருந்தாள். இப்போது அவளுக்கு ஒருவித வைராக்கிய முண்டாய் விட்டது.

மறுநாள் திருவேங்கடம் அம்புஜத்தை வந்து கண்ட

போது அவள், "ஆ! உன்னைக்காண்பது மிக்க சந்தோஷம். நீ இப்போது உன் புது வேலையில் சந்தோஷமாயிருக்கிறாயா?" என்றாள்.

திரு:—ஆம். ஆயினும் எனக்கு இந்த விவகாரத்தில் வேலை செய்யப்பிரியம். இக்கொலை விஷயத்தில்.

அம்பு:—"என்ன நீ கூறுவது?" என்றாள். அவன் கூறுவதில் உண்மையான அக்கரையுடையவன் என்று நன்றாகப் புலப்பட்டது. வாலிபன், "உன் சிறிய தந்தையின் கொலை விஷயமாய் வேலை செய்யவேண்டுமென்பது என் விருப்பம். அதைப்பற்றிச் சில அபூர்வ சம்பவங்கள் நிகழ்கின்றன" என்றான். அம்புஜம், "என்ன அபூர்வ சங்கதிகள்? திருஷ்டாந்தமாய் ஒன்று கூறு பார்ப்போம்" என்றாள்.

திரு:—இப்போது அச்சுதம்பிள்ளை நான் இதில் உளவறிகிறேனென்று தெரிந்தும் என்னை இங்கிருக்கவொட்டாமல் பள்ளூருக்கு அனுப்பவேண்டிய காரணமென்ன?

அம்பு:—ஏன்? உனக்கு நன்மை செய்யவேண்டியே. நீ சரியாக நன்றி காட்டவில்லையென்று தெரிகிறது.

திரு:—அப்படியல்ல. பள்ளூரிலிருக்கும் சேதுராம் என்ற வக்கீலுக்கு இன்னொரு ஆள் வேண்டியதேயில்லை. அவருக்குத் திருப்தியான ஆள் இருக்கவேயிருக்கிறான். அச்சுதம்பிள்ளை என்னை யங்கு வைத்துக்கொள்ளும்படி அவரை வேண்டிக்கொண்டிருக்கிறான். என் சம்பளத்தைத் தானே கொடுப்பதாய் அச்சுதம்பிள்ளை ஒப்புக்கொண்டு இந்த ஏற்பாடு செய்திருக்கிறான். அப்போது இவன் என்னை இங்கிருக்கவொட்டாமல் தூரத்தில் அனுப்பிவிடவே யிப்படிச் செய்திருக்கிறான். ஏன்?

அம்புஜம் "உனக்கெப்படி யிது தெரியும்" என்றாள். திருவேங்கடம், "அங்கிருக்கும் இன்னொரு ஆள் யாவும் எனக்குக் கூறினான். அச்சுதம்பிள்ளை இரண்டு மாதங்கள் வரை என்னை யங்கிருக்க வேண்டுமென்றும், சம்பளம் தான் கொடுப்பதாகவும் ஏற்பாடு செய்திருக்கிறான். நான் உடனே சென்றுவிட வேண்டுமென்று என்னிடம் கூறினான். அங்கு பார்த்தால் ஆளுக்கே அவசியமில்லை" என்றான்.

அம்பு:—நீ இலக்ஷ்மணனுக்கு விரோதமான ருசுக்களைக் கண்டுபிடிப்பா யென்று சந்தேகித்து அப்படிச் செய்தார்.

திரு:—நானா? இலக்ஷ்மணனுக்கு விரோதமாகவா? ஒரு போதுமில்லை. அப்படி அகப்பட்டால்கூட நான் அவற்றை வெளியிடமாட்டேன். ஏனெனில் இலக்ஷ்மணன் நிரபராதி யென்று எனக்குத்தெரியும்.

அம்புஜம் மிக்க வியப்பும் சந்தோஷமுமடைந்து, "ஆனால் அச்சுதம்பிள்ளை யப்படி தவறாய் எண்ணிக் கொண்டே யுன்னைத் தூரத்திலனுப்பிவிட்டார்" என்றாள். திருவேங்கடம், "இல்லை யில்லை. இந்த விஷயத்தில் நீ யுண்மையைக் கிரகிக்கவில்லை. நான் கூறுவதைக் கேள். எனக்கு துப்பறியும் சாமர்த்தியம் இயற்கையில் உண்டாயிருக்கிறது. இவ்விஷயத்தின் பயங்கர மர்மம் என் அந்தரங்கத்தில் புலப்படுகிறது. என்னிடம் சரியான உளவுகளகப்பட்டிருக்கின்றன. என் பேச்சைக்கேட்டு மற்ற பேரைப் போல் நீயும் அலட்சியமாய் நகைப்பதாயின் நான் உடனே அந்த உளவுகளை யழித்துவிடுவேன். இச்சங்கதி யித்தோடு ஒழியட்டும்" என்றான்.

அப்போது திருவேங்கடம் பேசியமாதிரி ஒரு சரியான கெட்டிக்கார துப்பறிபவன் உண்மையான உளவுகளைக்

கண்டுபிடித்து பிறர் அவைகளை மூடத்தனமாய் நம்பாவிட்டால் வெறுப்போடு எப்படி பேசுவானே அவ்வாறே இச் சந்தர்ப்பத்தில் அவன் பேசுவதாக அம்புஜத்திற்குப் புலப்பட்டது. அவள் அன்போடு, "என்ன உளவுகள்?" என்ருள்.

திரு:—அம்மா அவற்றை யுன்னிடம் இப்போது கூறமாட்டேன். நான் கெட்ட எண்ணத்தோடு கூறுவதாய்க் கருதாதே. தயவுசெய்து இப்படிக்கூற மறுப்பதற்கு என்னை மன்னிக்கவேண்டும். கடைசியில் நீ இதைப் பற்றி மிக்க சந்தோஷமே யடைவாய். அவை சரியான உளவுகள். ஆனல் அவற்றை யொருவரிடமும் கூறேன். அதற்குத்தக்க துப்பறியும் ஆளிடந்தான் கூறுவேன்.

அம்பு:—அப்படியாயின் கிருஷ்ணராவிடம் கூறுவது தானே?

திரு:—இல்லை யில்லை. இத்தகைய உளவுகளிலிருந்து உண்மையைக் கண்டறியும் சாமர்த்தியம் அவனிடமில்லை.

அம்பு:—அப்படியாயின் யாரிடந்தான் கூறுவாய்.

திரு:—அதற்குத் தகுதியான ஆள் ஆனந்தலிங் ஒருவனே. அவனிடம்தான் கூறுவேன்.

அம்பு:—ஆ! ஆனந்தலிங் பெயரை நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

திரு:—ஆகா! அப்படியாயின் இதில் மெய்யான கொலையாளியைக் கண்டறியத்தக்கவன் அவன் ஒருவனே.

அம்பு:—"சரி. அப்படியாயின் இப்போது நீ விடை பெற்றுக்கொள். நான் ஆனந்தலிங்கை வரவழைக்கத் தீர்மானித்ததும் உனக்குச் சங்கதி தெரிவிக்கிறேன்" என்று கூறினுள்.

திரு:—"அப்படியே செய். நான் இதற்காக இப்போது இங்

கேயே யிருக்கப்போகிறேன். பள்ளூருக்குச் செல்ல மாட்டேன். எனக்குச் சங்கதி யனுப்புவதாயின் இதோ டெலிபோன் நம்பரும் விலாசமும்" என்று ஒரு சிறு கடிதத்தில் விலாசம் எழுதி யளித்துவிட்டுச் சென்றான்.

அம்புஜம் அச்சீட்டைப் பத்திரமாய் வைத்துக் கொண்டு தான் கேள்விப்பட்ட சங்கதிகளைப்பற்றி ஆழ்ந்த சிந்தனையிலிருந்தாள். ஏனெனில் திருவேங்கடத்தின் விஷயத்தில் அவளுக்கு மிக்க வியப்பும் நம்பகமும் உண்டாயின.

---

## 19-வது அத்தியாயம்.

அம்புஜத்தினிடம் சம்பாஷித்துக்கொண் டிருந்து புறப்பட்ட திருவேங்கடம் அங்கிருந்து நேராக அச்சுதம்பிள்ளையிடம் சென்றான். அப்போது மணி பகல் ஒன்றிருக்கும். அச்சுதம்பிள்ளை சிற்றுண்டி யருந்த அப்போதுதான் உட்கார்ந்தான். அவன் திருவேங்கடத்தைக் கண்டதும் திடுக்கிட்டு வியப்படைந்து, "ஆ! திருவேங்கடம்! நீ பள்ளூரில் மிக்க அவசரமான வேலையிலிருக்கிறு யென்றல்லவோ நான் எண்ணிக்கொண் டிருக்கிறேன்" என்றான்.

திருவேங்கடம் சட்டென்று அம்புஜம்மாள் என்னை வரும்படி கடிதம் அனுப்பியதால் நான் வந்தேன் என்று கூறிவிடவிருந்தான். ஆனால் என்ன காரணத்தாலோ அதை மறைத்து விட்டு, "நான் வந்திருக்கமாட்டேன். என் சிறியதாய் மிக்க அசௌக்கியமாக விருப்பதாகச் சமாசாரம் வந்ததால் நான் உடனே வந்தேன். இப்போது அந்தம்மாள் இருக்கும் நிலைமையில் நான் உடனே அந்தம்மாளை

14

விட்டுப்போக எனக்குப் பிரியமில்லை. ஏனெனில் எனக்கிருப்பது அந்தம்மாள் ஒன்றுதான். அந்தம்மாளுக்கிருக்கும் ஆதரணை நான் ஒருவனே யாதலால் நான் அந்தம்மாளை விட்டுச் செல்லலாகாது.

உண்மையில் அவன் சிறிய தாயாகிய பொன்னம்மாள் நல்ல சுகதேகியாகவே, திருவேங்கடத்திற்காக நல்ல உணவுகளை யாயத்தம் செய்துகொண் டிருக்கிறாள்.

அச்சுதம்பிள்ளை திருவேங்கடத்தை நோக்கி, "அப்படியாயின் சேதுராம் வக்கீலை விட்டு வந்துவிட்டாயோ?" என்றான்.

வாலிபன்:—"நான் சின்னம்மாளைப் பார்க்க வந்தேன். அவள் கஷ்டப்படுவதைக் கண்டபோது இப்போது அவளை விட்டுச்செல்ல மனம் வரவில்லை. நான் இங்கேயே யிருக்கலாகும். சேதுராம் வக்கீலுக்கு நான் அவசியம் வேண்டுமென்று நீ கருதுகிறாயா? அவருக்கு நான் அவசியமில்லை யென்றே எனக்குத் தெரிகிறது. உண்மையில் நான் அவருக்கு அனவசியம்" என்றான்.

அச்சு:—அப்படியா? ஆனால் உனக்கு இங்கேயே யொரு வேலை பார்க்கலாம். அப்போது நீ யுன் சிறியதாயின் க்ஷேமத்தைக் கவனிக்க அனுகூலமாக விருக்கும்.

திருவேங்கடம்:—மிக்க வந்தனம், அப்படிச் செய்தால் மிக்க நலமே.

அச்சு:—"நான் சிற்றுண்டியருந்தப் போகிறேன். நீயும் நானும் ஒன்றாயருந்துவோம். அப்போது நமது சங்கதிகளைப்பற்றிப் பேசலாம்" என்றான்.

திருவேங்கடம் "உம்போன்ற நாணயமானவர்களோடு பேச நான் அருகனல்ல" என்றபோது அச்சுதம்பிள்ளை, பரவாயில்லை யென்று உண்மை விசுவாச முடையவன் போல் "நீ என் மனமொத்த நண்பரிடம் வேலை செய்தவ

ஞதலின் உன்னிடம் இத்தகைய அன்போடு நடந்து கொள்ள எனக்கு விருப்பம். நல்ல நாணயமான ஆனல் சாதாரணமான ஒரு ஹோட்டலுக்குச் சென்று இருவரும் போசனம் செய்வோம், அப்போது நமது விஷயங்களைப் பற்றி சாவதானமாகப் பேசலாம்'' என்ருன்.

இருவரும் ஹோட்டலுக்குச் செல்லும்போது அச்சுதம்பிள்ளை திருவேங்கடத்தை நோக்கி "நான் இப்போது என் சொந்த ஹோட்டலுக்கு அழைத்துச் செல்லமாட்டேன். உனக்கு மேலான நிலைமைக்கு வரவேண்டுமென்ற ஆசையிருப்பதால், ஒரு நாளைக்கு நான் உன்னை எந்த உயர்தர விடத்திற்கும் அழைத்துச் செல்லக்கூடிய அந்தஸ்துக்கு நீ வருவாய் என்று நான் முன்னடியே கூறுகிறேன்'' என்ருன்.

**திரு:**—"இத்தகைய சம்பாஷணைதான் ஒருவனை மேலுக்கு வரத்தூண்டுகிறது. என் சிறியதாய்கூட எனக்கு மேலான நிலைமைக்குவர எல்லாரைக் காட்டிலும் அதிக விருப்பம் என்று கூறுகிருள்'' என்ருன்.

இருவரும் ஹோட்டலில் சென்று உட்கார்ந்ததும் திருவேங்கடம் அச்சுதம்பிள்ளை யெவ்வாறு போசனம் செய்யும்போது நடந்து கொள்கிருனே அவ்வாறே நடந்து கொள்ளத் தொடங்கினன்.

திருவேங்கடம் அச்சுதம் பிள்ளையை நோக்கி "இரத்தினசாமிப் பிள்ளையைக் கொன்றது யாரென்பதை யதிகாரிகள் இன்னும் கண்டு பிடிக்காமலிருப்பது வெட்கக்கேடல்லவா?'' என்ருன்.

அச்சு:—ஏன்? அக்குற்றம் இலக்ஷ்மணன்மேல் சாட்டப்பட்டிருப்பதை நீ யறியாயோ ?

**திரு:**—தெரியும். ஆனல் இலக்ஷ்மணன் அதைச் செய்ய

வில்லை. அதனால் அவர்கள் உண்மைக் கொலையாளியைக் கண்டுபிடிக்காத மாதிரியே.

அச்சு:—நீ யப்படி நினைக்கவில்லையா? ஏன்?

திரு:—நான் மனிதனுடைய குணங்களைப்பற்றிய சாத்திரத்தை வாசித்துப் பார்த்தேன். அவன் அசட்டைத் தனமே அவன் குற்றவாளி யல்லவென்று காட்டுகிறது.

அச்சு:—என்ன அசட்டைத்தனம்?

திரு:—அவன் கொலை செய்திருந்தால் அப்படித் தாராளமாய்க் கூறியிருக்கமாட்டான். கொலை நடந்த விடத்தில் தான் இருந்ததாகவும் அவரைப் பணம் கேட்டுச் சச்சரவு செய்ததாகவும், இவற்றை யெல்லாம் கூறியிருக்கமாட்டான். அதற்கு மாறாக, தான் அச்சமயம் வேறிடத்தில் இருந்ததாக ருசுப்படுத்த எவ்வளவோ முயற்சி யெடுத்துக்கொண் டிருப்பான். சிறை செய்யப்பட்ட போது அம்மாதிரி யிருந்திருக்க மாட்டான்.

அச்சு:—சரி. இலக்ஷ்மணன் குற்றவாளி யல்லாவிட்டால் வேறு யார்தான் கொலை செய்தது?

திரு:—எனக்குத் தெரியாது. ஆனால் உண்மைக் கொலையாளியைக் கண்டு பிடிக்கக்கூடியவன் ஒருவன் இருக்கிறான்.

அச்சு:—யாரது?

திரு:—அவன் பெயர் ஆனந்தஸிங்.

அச்சு:—அவன் உனக்குத் தெரியுமோ?

திரு:—"அவனைப்பற்றி யதிகமாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆளைப்பார்க்கும் சந்தர்ப்பம் நேரிடவில்லை. பத்திரிகைகளில் அவன் கண்டுபிடித்த குற்றங்களைப் பற்றி ஏராளமாய் வாசித்திருக்கிறேன். இதோ சமீ

பத்தில் அவன் கண்டுபிடித்த குற்றம்'' என்று கூறிக் கொண்டே தன் ஜேபியிலிருந்த ஒரு பத்திரிகையை யெடுத்து மேஜைமேல் வைத்தான்.

அதற்குள் வேலையாள் சிற்றுண்டி கொண்டுவந்தான். அச்சுதம்பிள்ளை வாலிபனை யன்போடுபசரித்து, "ஆ! திருவேங்கடம்! உன் சிறிய தாய்க்காகத்தானே நீ யிதைவிட்டுப் போகக்கூடவில்லை. உன் சிறிய தந்தையையும் பள்ளூருக் கழைத்துச் செல்லும்படி ஏற்பாடு செய்துவிட்டால் நீ சேதுராம் வக்கீலிடமே யிருக்கலாமல்லவா?'' என்றான்.

**திரு:**—ஆ! மிக்க சந்தோஷமே. ஆயினும் இந்திரபுரியை விட்டுச் செல்ல எனக்குப் பிரியமில்லை. இவ்வூரில் தான் எனக்கு விருப்பம்.

அச்சு:—"அப்படியாயின் இங்கேயே யொரு வேலை பார்க்க வேண்டும்'' என்று கூறியபின் அவன் தன் காபியை யருந்தியதைக் கண்டு இன்னொரு கிண்ணம் காபி கொண்டுவரச் சொல்லி அதில் தானே சர்க்கரை யள்ளிப் போட்டான். அச்சர்க்கரை முதல் முறை ஹோட்டல்காரன் காபியில் போட்டது போலில்லை. திருவேங்கடம் மிக்க மரியாதையோடு இவ்வளவு காபி சாப்பிட்டு எனக்குப் பழக்கமில்லை என்று கூறி விட்டான். அச்சுதம்பிள்ளை எவ்வளவோ வேண்டி யுபசரித்தும் திருவேங்கடம் அதை யருந்தாமலே, "மிக்க வந்தனம். மேலும் இந்த இலக்ஷ்மணன் விவகாரம் எப்படி நடக்கிறதென்று கவனிக்கவேண்டும்'' என்றான்.

அச்சுதம்பிள்ளை புன்னகையோடு "ஓகோ இந்த விசாரணையில் நீ சம்பந்தப்பட் டிருக்கிறாயாக்கும்'' என்றான். திருவேங்கடம் "கேலி செய்யவேண்டாம். என்னிடம் எதுவோ ஒன்றிருக்கிறது. தக்க சமயத்தில் அந்த அம்

யைச்சரியான வில்லில் வைத்தெய்தால் அது இலக்ஷ்மணனைக் காப்பாற்றக் கூடும்'' என்றான்.

அச்சுதம்பிள்ளை வியப்படைந்து "உனக்கு முக்கியமான உளவுகள் ஏதேனுமகப்பட்டிருந்தால் அவற்றை நீ யுடனே கூறிவிடவேண்டும்'' என்றான். திருவேங்கடம் "அவை யாவர்க்கும் முக்கியமானவையல்ல. யார் அதில் முக்கியத்தைக் காணக்கூடுமோ அவர்களுக்குத்தான் முக்கியம். உன்னிடம் கூறியபோது நீ நகைத்தாய்'' என்றான்.

அச்சு:—அந்தப் பொத்தானும் மண்ணுந்தானே. அது சட்டைப் பொத்தான் என்று தானே கூறினை?

திரு:—இல்லையில்லை. அழகுக்கும் வைக்கும் பொத்தானென்று கூறினேனே.

அச்சு:—அவற்றைச் சோதித்துப் பார்த்தால் அப்பொத்தான் எச்சட்டையிலிருந்த தென்று கண்டு பிடிக்க முடியாது. அவை பயனற்றவைகள்.

திரு:—அப்படித்தானிருக்கும். ஆ! அன்று மட்டும் தாங்கள் பள்ளூருக்குப் போகாம லிங்கேயே யிருந்திருந்தால் மிக்க நலமாக விருந்திருக்கும்-இரத்தினசாமிப் பிள்ளையைத் தோட்டத்திற்குப் போகவிடாமல் நீங்களே தடுத்துவிட் டிருக்கலாம்.

அச்சு:—"ஆயினும் இவை யெல்லாம் தற்செயலாக நேர்பவையல்ல. அமைப்பின்படி நேர்வதென்று கூறுகிறார்கள். நான் இங்கிருந்திருந்தால் அன்று அவருடைய காரியாலயத்திற்குச் சென்றிருப்பேன். ஆனால் அவர் பூச்சிகளுக்காகப் போவதாயின் நான் போகட்டும் என்றே விட்டுவிட்டிருப்பேன். ஆ இதோ ஒரு ஆச்சரியமான புகைப்படம் பார்!'' என்று தன் ஜேபியிலிருந்து ஒரு புகைப்படத்தை யெடுத்துக்காட்டி, "நான் பள்ளூரிலிருந்த அன்று ஒருவன் அங்கிருந்த நற்காட்சியைப்

படம் பிடித்துக்கொண் டிருந்தான். நான் வேணு மென்றே அப்படத்தில் அகப்படுகிற விதமாய் முன் சென்று நின்றேன். இதில் பார்'' என்று கூறினன்.

திருவேங்கடம் அதை வாங்கிப் பார்த்தபோது அதில் பள்ளூர் இரயில் ஸ்டேஷனும் சிலஜனங்களும் வண்டிகளும் இருப்பது தெரிந்தது. அக்கூட்டத்தில் அச்சுதம்பிள்ளை பின்பக்கம் கரங்களைக்கட்டிக்கொண்டு படம் பிடிப்பவனைப் பார்த்துக்கொண் டிருப்பது போன்ற உருவம் நன்ருய்த் தெரிந்தது.

திருவேங்கடம் அதைப் பார்த்து விட்டு "ஆம் ஆச் சரியமான வேடிக்கையே. அதோடு நீ பள்ளூரிலிருந்து அவருக்கனுப்பிய தந்தி சமாசாரத்தை யவர் சேபியிலேயே வைத்திருந்தது மிக்க பரிதாபம்'' என்ருன். அச்சுதம் பிள்ளை அது வந்தபோது அவர் அதைச் சேபியில் வைத் துக்கொண்டார் என்ருன். பிறகு சற்று நேரம் இருவரும் சம்பாஷித்த பின் ஹோட்டலை விட்டுப் புறப்பட்டார்கள். இருவரும் வீதிக்குச் சென்றதும் திருவேங்கடம் "ஆ என் பத்திரிகையை அங்கேயே மறந்து விட்டுவிட்டேன்'' என்று திரும்பி ஓடிப்போய் சற்று நேரத்திற்குள் பத்தி ரிகையை யெடுத்துக்கொண்டு திரும்பி வந்தான்.

அதேதினம் மாலை அச்சுதம்பிள்ளை அம்புஜத்தைக் காணச்சென்றபோது "என் முயற்சியனைத்தும் முடிவிற்கு வந்து விட்டதுபோல் தெரிகிறது'' என்ருன். அம்புஜம் "ஆனல் நீர் தோல்வியடைந்தீர்'' என்ருள். அச்சுதம் பிள்ளை "இன்னும் இல்லை. அகௌரவ காரியத்திற்குடன் பட்டால்—ஆகும். உனக்காக எதையும் செய்வேன்.

அம்பு:—அதென்ன காரியம்?

அச்சு:—அதை யுன்னிடம் ஒருபோதும் கூறலாகாது.

அம்பு:—கூறியே தீரவேண்டும். எனக்குத் தெரியாதது எதையும் நீர் செய்ய விடேன்.

அச்சு:—அப்படியாயின் கூறுகிறேன். டெலிபோன் மூலமாகச் சிற்றப்பா என்று பேசிய சங்கதியே இலக்ஷ்மணனுக்கு முக்கிய விரோதமாயிருக்கிறது. வேறு யாரேனும் அச்சங்கதியைத் தான் அனுப்பியதாய் ஒப்புக் கொள்ளும்படி செய்யவேண்டும். அது பொய்ச் சாட்சிதான்.

அம்பு:—மிக்க அக்கிரமமானது. யார் அப்படி யொப்புக் கொள்வார்கள்.

அச்சு:—ஏன் - சரியான தொகை கொடுத்தால்.

அம்பு:—அய்யய்யோ ! அது மகா அநீதம். நான் அதற்குச் சம்மதிக்க மாட்டேன்.

அச்சு:—ஆனால் இலட்சுமணன் தண்டனை யடையும்படி விட்டு விடுவதா?

அம்பு:—அல்ல அல்ல. கொஞ்சம் பொறு. வேறு மார்க்கமிருக்கிறது.

அச்சு:—ஆ! நீ யுன் முயற்சியாலேயே செய்வதாகக் கூறினையல்லவா?

அம்பு:—ஆனந்தலிங் என்ற ஆள் உமக்குத் தெரியுமா?

அச்சு:—ஆம் தெரியும். ஏன்?

அம்பு:—நான் உண்மையான கொலையாளியைக் கண்டு பிடிக்கும்படி அவனைப் பார்க்கப்போகிறேன்.

அச்சு:—என்ன முட்டாள் தனம், நீ அத்தகைய காரியம் ஒன்றும் செய்யலாகாது.

அம்பு:—ஏன் ?

அச்சு:—கிருஷ்ணராவிடம் இதை யொப்பித்திருக்கிறோம். அவன் கெட்டிக்காரன். இன்னொருவனை யமர்த்தினால் அவனுக்கு வருத்தம் வரும்.

அம்பு:—அதற்கு நான் சட்டை செய்வேனென்று நினைக்கிறீர். ஆனந்தலிங் இலக்ஷ்மணனைப் பூரணமாய்க் காப்பாற்றக் கூடுமாயின் செய்யட்டும். எனக்கிருக்கும் ஐம்பதாயிரம் டாலரை யதற்கே செலவு செய்கிறேன்.

அச்சு:—நான் செலவிற்குக் கூறவில்லை. ஒரு கெட்டிக்கார துப்பறிபவன் கண்டு பிடிக்காததை யின்னொரு துப்பறிபவன் கண்டு பிடிக்க முடியாது. அதோடு இப்போது காலம் மிஞ்சிப்போயிற்று. துப்பறிபவன் ருசுவுகளனைத்தும் அழிந்து போனபின் எப்படி வேலை செய்வான்.

அம்பு:—அது எனக்குத் தெரியும். ஆனால் ஆனந்தலிங் அபூர்வசக்தியுடையவன்.

அச்சுதம்பிள்ளை யார் உனக்குக் கூறியது என்று அம்புஜத்தைக் கேட்டதற்கு அவள் அதை நான் கூறமாட்டேன் என்றாள். ஏனெனில் திருவேங்கடமும் மீனாட்சியம்மாளும் கூறினார்கள் என்றால் அவன் நகைப்பான் என்று கருதினாள். அதன்மேல் அச்சுதம்பிள்ளை "இந்த விஷயத்தில் நான் கூறுவது போல் செய்; ஆனந்தலிங் வந்தால் அவனால் இன்னும் கெடுதியாக முடியலாகும். அவனை யழைக்க வேண்டாம்" என்று மிக்க பிரயாசைப்பட்டுக் கூறினான்.

அதன்மேல் அம்புஜம் "நீ கூறுவதற்குக் காலம் தவறிவிட்டது. நான் முன்னமே யவனை வரும்படிக் கடிதம் எழுதிவிட்டேன்" என்றாள்.

அச்சு:—"அப்படியாயின் அதைப் பற்றிப் பேசுவதில் பயனில்லை. ஒன்று கட்டாயம் செய்; அவன் வரும்போது என்னை அவசியம் வரவழை, அவனுக்குச் சட்டம் தெரிந்த வக்கீல் உதவிவேண்டியிருக்கும்" என்றான்.

அம்பு:—சரி முதலில் என் அவனிடம் வெறுப்பு காட்டினை?

அச்சு:—"அது பயனில்லை யென்றே. அவன் ஒன்றையும் கண்டு பிடிக்க முடியாது. நீ யவனை யமர்த்திக் கொள்ளவேண்டு மென்றவரையில் சரிதான்" என்றுன்.

மறுநாள் மாலை அச்சுதம்பிள்ளை மறுபடி அம்புஜத்தினிடம் வந்து ஆனந்தலிங்கிடமிருந்து ஏதேனும் பதில் வந்ததா? என்றுன். அவள் இல்லையென்றதும் "ஒன்றும் வராது. அவன் ஊரிலில்லை. வர ஒருவாரத்திற்குமேல் செல்லுமாம்" என்றுன்.

அம்புஜம் சோர்வடைந்து "அடடா. உமது காரியம் எப்படி நடைபெறுகிறது?" என்றுள்.

அச்சு:—"மெதுவாக நடக்கிறது. நான் வேணுமென்றே ஆலசியப்படுத்துகிறேன். நான் ஒரு புது ஏற்பாடு செய்துகொண் டிருக்கிறேன். அது பெரும்பாலும் மிக்க உதவிசெய்யும் என்று நம்புகிறேன்" என்றுன். ஆனல் அந்தப் புது சங்கதியைக் கூற மறுத்து விட்டான்.

ஆனந்தலிங் வரமாட்டானென்றறிந்ததே அம்புஜம் மிக்க வியாகூலமுற்றுள். இலக்ஷமணனுக்காக எதையும் செய்யவே அவளுக்கு மனம். கடைசியில் அச்சுதம்பிள்ளை கூறியபடி எவ்வித அக்கிரமத்தைச் செய்தேனும் மீட்க முயலலாமா வென்று சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

மறுநாட் காலை திருவேங்கடம் அம்புஜத்தைக் காண வந்தபோது "ஏனம்மா ஆனந்தலிங்கிடமிருந்து பதில் வந்ததா?" என்று கேட்டான்.

அம்பு:—அந்தோ! நாம் அவனைக் காணமுடியாது. அவன் ஊரிலில்லை. ஒருவாரம் வரையில் வரமாட்டானும்.

திரு:—இல்லை. நேற்றுமாலை நான் அவனை நகர உத்தியான வனத்தில் கண்டேன்.

அம்பு:—அப்படியாயின் திடீலென்று வந்திருக்கவேண்டும். நான் அவனுக்கு டெலிபோன் கொடுக்கிறேன்.

திருவேங்கடம் அப்படியாயின் இப்போதே கொடு என்ருன். அம்புஜம் உடனே ஆனந்தஸிங் டெலிபோன் நம்பரைக் கூப்பிட்டு அவனை வரும்படி யழைத்தாள். ஆனந்தஸிங் "ஏன்? நீ முதல் எழுதிய கடிதத்தை வாபீஸ் வாங்கிக்கொள்வதாகவும் என்னை வரவேண்டாமென்றும் டெலிபோன் கொடுத்திருக்கிருயே" என்ருன்.

அம்பு:—நான் கொடுக்கவில்லையே.

ஆனந்தஸிங்:—உன் கையெழுத்திட்டு தான் வந்தது.

அம்பு:—எங்கோ தவறு நடந்திருக்கிறது.

அருகிலிருந்து யாவும் கேட்டுக்கொண்டிருந்த திருவேங்கடம் "அல்ல அல்ல அது தவறல்ல. நீ பேசாமல் ஆனந்தஸிங்கை யுடனே வரச் சொல்லம்மா" என்ருன்.

அம்பு:—"எனக்குத் தெரியாது. இச்சங்கதியை அச்சுதம் பிள்ளையிடம் கேட்டுச் செய்யவேண்டும்" என்ருள்.

திருவேங்கடம் அதை யிப்படிக் கொடு என்று பேசும் குழலை யவள் கரத்திலிருந்து வாங்கிக்கொண்டு "அது தவறல்ல. வேணுமென்று செய்த மோசச்செயல். தயவு செய்து உடனே வா" என்று கூறினன். ஆனந்தஸிங் நீ யார் என்று கேட்டதற்கு சிறுவன் "நான் அம்புஜம்மாளின் காரியஸ்தன்" என்ருன். ஆனந்தஸிங் "அப்படியாயின் அந்தம்மாளையே ஒரு வார்த்தை கூறச்சொல்லு" என்ருன்.

திருவேங்கடம் அம்புஜத்தினிடம் பேசும் குழலைக் கொடுத்து, "அம்மா அவனை யுடனே வரும்படி கூறு. நீ இலக்ஷ்மணனை மீட்டவேண்டுமாயின் இந்த ஒரு சந்தர்ப்

யமே யிருக்கிறது. சீக்கிரம். நான் கூறுவதை நம்பு" என்றான்.

அம்புஜம் அவன் பேசியமாதிரியால் தூண்டப்பட்டு அவ்வாறே கூறினாள். ஆனந்தலிங் அரைமணி நேரத்தில் வருவதாய்க் கூறினான்.

அம்புஜம் பாதி கோபத்தோடும் வியப்போடும், "நீ ஆச்சரியமான பிள்ளை" என்றாள்.

திரு:—அம்மா! இப்போது தவறு செய்துவிடாதே. நான் அனுவசியமாய் அல்லது மூடத்தனமாய் இதில் தலையிடவில்லை. இதில் பெருந்துரோகமான வேலை நடக்கிறது. அச்சங்கதி என்னைத் தவிர வேறொருவர்க்கும் தெரியாது. அது மிக்க பிரமாதமானதா யிருப்பதால் நான் தனியே யதைக் கையாளமுயலவில்லை. அந்தக் கிருஷ்ணராவ் முட்டாளாலும் முடியாது. ஆனந்தலிங் தவிர அதற்குத்தகுந்தவன் வேறெவனுமில்லை. அய்யோ! நீ அவனை யிழந்துவிட மயிரிழை தப்பினாய். ஏனம்மா! உன்பெயரால் வேறு யாரோ ஆனந்தலிங்குக்கு அத்தகைய சமாசாரத்தை யனுப்பினார்கள் என்றதாலேயே எங்கோ பெரிய மோசம் நடக்கிறதென்று உன்மனதிற்குப் புலப்படவில்லையா?

அம்பு:—ஆம். யாரோ இலக்ஷ்மணனுக்கு விரோதமாய் நடந்துகொண் டிருக்கிறார்கள். அச்சுதம்பிள்ளை அதற்காகத்தான் இவ்வளவு காலமாய் அச்சப்பட்டுக் கொண் டிருக்கிறார். அவர் இச்சமயம் இருந்தால்...

திரு:—யார். அச்சுதம்பிள்ளையா?

அம்பு:—ஆம். ஆனந்தலிங் வரும்போது அவரை வரவழைப்பதாய் வாக்களித்திருக்கிறேன். சட்ட அனுபவமுடைய ஒருவர் வேண்டும்.

திரு:—"இதோ நான் இருக்கிறேன். அதிலும் இந்த விஷ

யத்தில் சரியானவன். சட்ட அனுபவமுடைய என் மனம் இன்று காலையிலிருந்து மிக்க தீக்ஷண்யமாய் வேலைசெய்துகொண்டிருக்கிறது. ஆனந்தலிங்கிடம் கூறவேண்டிய சங்கதிகள் அனேகம் என்னிடமிருக்கின்றன" என்று துணிகரமாகவும் நம்பகமாகவும் கூறினான்.

அம்புஜம் மிக்க வியப்படைந்து, "ஓ திருவேங்கடம்! உன்னைப் போய்விடு என்பதோ அல்லது நீ கிடைத்தது என்னுடைய நல்லதிஷ்டமென்று நினைப்பதோ எனக்குத் தெரியவில்லை" என்றாள்.

**திரு:**—"அம்மா! அதைப்பற்றி நீ கலவரம் வைத்துக் கொள்ள வேண்டாம். நீ வேண்டுமாயின் பார். இந்த விவகாரம் முடிவிற்கு வரும்போது என்னைச் சந்தித்ததற்காக நீ மிக்க சந்தோஷமும் பெருமையுமடைவாய். நான் கூறுவது வீண்பெருமையான வார்த்தையல்ல. கடவுளுக்காக என்னைப் பூரணமாக நம்பு" என்றான்.

**அம்பு:**—அப்படியாயின் நீ கொஞ்சம் மரியாதையாகவும் நாணயமாகவும் என்னிடம் வார்த்தையாடு.

**திரு:**—"அம்மா! உண்மையாகவே அப்படியே நடந்து கொள்ளவேண்டு மென்பதுதான் என் விருப்பம். நான் மரியாதைத் தாழ்வாய்ப் பேசவேண்டுமென்று விரும்பவில்லை. எனக்கு அப்படிப் பழக்கமாய் விட்டது. நான் நல்ல விஷயத்தைக் கூறும்போது ஏற்றுக் கொள்ளாமல் மறுத்தால் அப்போது எனக்குண்டாகும் ஆத்திரத்தால் ஒரு மாதிடம் பேசுகிறோம் என்பதை மறந்துவிடுகிறேன். ஆயினும் இனி மரியாதையாகவும் நாணயமாகவுமே நடந்து கொள்ள மனப்பூர்வமாய் முயல்கிறேன்" என்றான்.

## 20-வது அத்தியாயம்.

அரை மணி நேரங்கழிவதற்குள் ஆனந்தலிங் வந்தான். அம்புஜம் அவனைத் தனியே சந்தித்தாள். ஆனால் திருவேங்கடத்தை மட்டும் அறையின் ஒரு மூலையில் பேசாமல் உட்கார்ந்திருக்கும்படி ஏற்பாடு செய்தாள். உபசாரவார்த்தைகளனைத்தும் முடிந்தபின் ஆனந்தலிங், "இந்த விவகாரத்தைப்பற்றி நான் பத்திரிகைகளில் தொடர்ச்சியாக உன்னிப்பாய்க் கவனித்தேன். இது அனேக அம்சங்களில் யாவரையும் ஏமாற்றத்தக்கதாகவே யிருக்கிறது. இதுவரையில் வெளிவராத சங்கதி யேதேனும் நீ கூறக்கூடுமோ?" என்று வினவினான்.

அம்பு:—"எனக்கு மிகக் கொஞ்சமே தெரிந்தது" என்று கூறிவிட்டு மூலையிலிருக்கும் திருவேங்கடத்தைக் குறிப்பாய் நோக்கினாள். மறுபடி ஆனந்தலிங்கைப் பார்த்து, "நான் இதைப்பற்றிப் பேசும்போது ஒரு வக்கீலைக் கூட வைத்துக்கொள்ள எண்ணியிருந்தேன். ஆனால் இவ்வாலிபன் உம்மையே வரவழைக்கும்படி கூறினான். இவன் என் சிறிய தந்தையின் காரியலாயத்தில் இருந்தவன்" என்றாள்.

திருவேங்கடம் மூலையிலிருந்தபடி அவனுடைய முகத்தோடும் எப்போது நம்மைப் பேசச்சொல்வார்களோ என்ற மனப்பதைப்போடும் இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தான்.

அம்புஜம் கூறியதைக் கேட்ட ஆனந்தலிங் "ஆகா! உடான் திருவேங்கடம் என்பவனா?" என்றான். அம்புஜம் "ஆம். இவன் ஏதோ முக்கியமான உளவுகளைக் கண்டு பிடித்திருப்பதாய்க் கூறுகிறான்" என்றாள்.

ஆனந்த:—"அவன் கண்டு பிடித்திருப்பான் என்றே நான்

நம்புகிறேன். அவன் மரண விசாரணையின் போது சாக்ஷி கூறியதையெல்லாம் நான் கவனித்தேன். இப்போது அவனைக் கண்டு பேச சந்தர்ப்பம் கிடைத்ததற்காக நான் சந்தோஷப்படுகிறேன்'' என்றான்.

அம்மொழிகளைக் கேட்டதே திருவேங்கடத்திற்கு மிக்க சந்தோஷமும் உற்சாகமு முண்டாயின. அவன் மெதுவாய் "ஏனம்மா! இப்போது நான் பேசலாமா?'' என்றான்.

அம்பு:—"இப்போது உனக்குத் தெரிந்த யாவும் இவரிடம் கூறு. உண்மையையே கூறு'' என்றாள்.

ஆனந்த:—என்னிடம் அப்படிக் கூறமாட்டான்.

திரு:—"ஒருகாலும் கூறமாட்டேன். உன்னிடம் கூறமாட்டேன். அது எப்படியெனில், எனக்குத் துப்பறியும் ஊக்கமிருக்கிறது. கொலை நடந்த மறுதினம் அந்த இடத்திற்குச் சென்று நான் சோதித்துப்பார்த்தேன். அங்கேயொரு பாதரட்சைப் பொத்தானைக் கண்டு பிடித்தேன்'' என்றதே,

அம்புஜம் அவனை நோக்கி "திருவேங்கடம்! அச்சுதம் பிள்ளையிடம் அது அழகுக்கு வைக்கும் பொத்தான் என்று ஏன் கூறினாய்?'' என்றாள்.

திரு:—ஆம். அப்படிக் கூறவேண்டி யிருந்தது. நான் அவரிடம் ஒரு பொத்தானைக் கண்டேன் என்றதே அவர் முகத்தில் உண்டான குறிப்பால் அவரிடம் உண்மையைக் கூறலாகாதென்று எனக்குப் புலப்பட்டது. அதனால் பொய் கூறினேன்.

ஆனந்த:—அப்போது அவர் முகத்திலுண்டான குறியெப்படிப்பட்டது கூறு பார்ப்போம்.

திரு:—"நான் பொத்தான் என்றதே அவர் எத்தகைய பொத்தான் என்று மிக்க ஆவலோடு கேட்டார். அச்

சமயம் அவர் முக விகாரத்தால் அவர் நான் கூறும் விடையின் மேல் தமது உயிர் நிலையே யிருப்பது போல் கருதியதாக எனக்குப் புலப்பட்டது. அதற்குச் சரியாய் நான் அழகு பொத்தான் என்றதே அவருக்கிருந்த ஆவல் அக்கரை யாவும் அடியோடொழிந்தன. அவர் தமது மனதிலிருந்த பெரும் பாரம் நீங்கியவர் போல் காணப்பட்டார். உடனே நாம் மறைத்துக் கூறியது நல்லதாயிற்றென்று என் புத்தியிற் பட்டது" என்றான்.

ஆனந்த:—திருவேங்கடம்! துப்பறிபவனுக்கு வேண்டிய சரியான புத்தி யுன்னிடமிருக்கிறது. நீ செய்த இக்காரியம் மிக்க புத்தி சாமார்த்தியமானது. நான் உன் விஷயத்தில் மிக்க சந்தோஷப்படுகிறேன். அப்புறம்!

திரு:—அப்பொத்தான் இலக்ஷ்மணனுடைய பாதரட்சையிலிருந்து வந்ததல்ல.

ஆனந்த:—அது உனக்கெப்படித் தெரியும்?

திரு:—நான் வேலைக்காரியைத் தந்திரமாய்க் கேட்டு இலக்ஷ்மணன் பாதரட்க்ஷைகளை யெல்லாம் பார்த்தேன். அவற்றில் எதிலிருந்தும் பொத்தான் விழுந்துபோயிருக்கவில்லை. விழுந்துபோய் புது பொத்தான் பதிலுக்கு வைத்துத் தைக்கப்பட்டிருக்கவுமில்லை. மேலும் இப்பொத்தான் நமது நகரத்தில் இருக்கும் பாதரட்க்ஷைகளில் வைக்கப்படுவது. இலக்ஷ்மணனிடமிருக்கும் பாதரட்சைகளெல்லாம் மேற்கு நாட்டில் செய்யப்பட்டவை.

ஆனந்த:—அப்படியாயின் அது யார் பாதரட்சையிலிருந்து விழுந்தது?

திரு:—"யாருடைய பாதரட்சையோ கூறமுடியாது. அதை

நீதான் கண்டு பிடிக்கவேண்டும். என் உளவுகளெல்லாம் உன்னிடம் கொடுக்கப்படவே தகுதியுடையவையென்று முன்னமே அம்புஜம்மாளிடம் கூறிவிட்டேன். இப்போது இன்னொரு உளவு ஒரு மொத்தை மண். அதைப் பத்திரமாக வீட்டிலேயே வைத்திருக்கிறேன். அதில் நன்ருக விளங்கக்கூடிய ஒரு குறியிருக்கிறது. வட்டமாய் ஆழமாயிருக்கிறது. அதை நீ பார்த்து உன் கருத்தைக் கூறவேண்டுமென்பது என் எண்ணம். ஏனெனில் அதைப்பற்றி நான் எண்ணியது போலவே நீ எண்ணுகிருயா என்றறிய வேண்டும்'' என்ருன்.

துப்பறியும் வேலையில் பிரசித்தி பெற்றவனும் மிக்க அனுபோக முடையவனுமாகிய ஆனந்தலிங்கோடு நாம் சமமாய்க் கருதப் பார்க்கிரேமே என்று திருவேங்கடம் கருதவில்லை. ஆனுல் ஆனந்தலிங் அதைச் சாதாரணமாய் கருதினுனே யன்றி அதைப்பற்றி சற்றும் மனத்தாங்கலடையாததைக் கண்ட அம்புஜம் மிக்க ஆச்சரியமடைந்தாள்.

ஆனந்த:—மண்ணில் வேறு குறிகளிருந்தனவோ?

திரு:—ஆம், அந்த இடத்தில் அனேகம் கீற்றுகள் முதலிய குறிகளிருந்தன. அவற்றையெல்லாம் நான் துடைத்து விட்டேன்.

ஆனந்த:—துடைத்து விட்டாயா? உளவுகளை யழித்தா விட்டாய்?

திரு:—எனக்கு அவை அதிகம். நான் என்செய்வது? எனக்கு முக்கியமாய்த் தோன்றியதைப் பத்திரம் செய்து கொண்டேன். நான் அவற்றைக் கையாட முடியாது. அச்சுதம் பிள்ளையிடம் கூறினுல் அவர்

கேலி செய்கிறார். அந்தத் துப்பறியும் கிருஷ்டப் பனுக்கோ ஆழ்ந்து 'பார்க்கும் சாமர்த்தியமில்லை. உன்னைத் தவிர வேறு ஒருவரும் தகுதி யுடையவர்க ளல்லவென்று தெரிந்து கொண்டேன். நீ கடவுள் தயவால் வந்து விட்டது பெரும்புண்ணியம்.

ஆனந்தவலிங் அம்புஜத்தை நோக்கி "அம்மா! நான் இதைக் கண்டுபிடிக்கவேண்டு மென்று நீ தீர்மானிப்பதாயின் நான் உடனே திருவேங்கடத்தோடு கூடச்சென்று அவன் கண்டுபிடித் திருக்கும் உளவைப் பார்க்கவேண்டும். அது முக்கியமானதாக விருக்கலாகும்" என்றான்.

அம்புஜம் அவ்வாறே யொப்புக் கொண்டாள். ஆனந்தவலிங் "சரி, இப்போது உனக்கும் திருவேங்கடத்திற்கும் தவிர வேறொருவருக்கும், எப்படிப்பட்ட ஆளுக்கும் நான் யாரென்று தெரியலாகாது. யாவர்க்கும் நான் மேற்கு நாட்டிலிருந்து வந்த குருநாதன் என்பவனென்றும் இலக்ஷ்மணனுடைய சிநேகிதன் என்றும் கூறிவிடு" என்றியம்பிவிட்டுத் திருவேங்கடத்தை யழைத்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டான்.

இருவரும் வீதியின் வழியாய்ச் செல்லும்போது ஆனந்தவலிங் "அப்படியாயின் நீ அம்புஜத்தின் காரியஸ்தனாக விருக்கிறாய்" என்றான்.

திரு:—இல்லை. அது பொய். அச்சமயம் உனக்கு அப்படிக் கூறவேண்டியிருந்தது. ஏனெனில் அம்புஜம் கலக்க மடைந்து அச்சுதம் பிள்ளையைக் கேட்ட பின்பே யுன்னை வரும்படிக் கூறவேண்டு மென்றாள்.

ஆனந்த:—நீ ஏன் அடிக்கடி பொய் கூறுகிறாய்?

திரு:—அப்படியல்ல. அது தற்செயலாய் வருகிறது. அனேகந்தரம்; அதனால் நன்மையே யுண்டாகிறதென் றறிந்தேன். அனாவசியமானவர்களிடம் உண்மை

யைக் கூறுவது பயனில்லை யென்று கருதுகிறேன். மேலும் என் தொழிலில் அப்படி நடப்பதுதான் நலமென்று தோன்றுகிறது.

ஆனந்த:—உன் தொழிலென்ன?

திரு:—இது காறும் இரத்னசாமிப் பிள்ளையின் காரியால யத்தில் இருந்தேன். துப்பறியும் தொழில் செய்ய வேண்டு மென்பதே என் விருப்பம். இப்போது உன்னைக் கண்டபின் நானும் துப்பறிபவனாவேன் என்று நம்புகிறேன். ஏனெனில் என் மனப்போக்கு உன் மனப்போக்கு போலவே காணப்படுகிறது.

ஆனந்தலிங் அவனை யுற்று நோக்கி, "திருவேங்கடம்! சரியான துப்பறிபவன் எப்போதும் பொய் சொல்லிக் கொண்டிருக்கலாகாது" என்றான். திருவேங்கடம் "இனி யப்படிக் கூறவே மாட்டேன். தொழில் முறைமைக்கு அவசியமா யிருந்தால் மட்டுமே கூறுவேன். நீயும் எல்லாச் சமயங்களிலும் உண்மையை வெளியிட்டுவிட மாட்டாய் என்றே கருதுகிறேன்" என்றான்.

ஆனந்தலிங் புன்னகை புரிந்து "அதைப்பற்றிப் பிறகு பேசலாம். இப்போது உன் வீடு எவ்வளவு தூரத்திலிருக் கிறது கூறு" என்றான். திருவேங்கடம் சுமார் இன்னும் ஒரு மைல் தூரத்திற்கு அதிகமாக விருக்கும் என்றதே, ஆனந்தலிங் "அப்படியாயின் நாம் ஒரு வண்டி யமர்த்திக் கொண்டு செல்வோம்" என்றான்.

அவ்வாறே அருகிலிருந்த வண்டிமேட்டில் ஒரு வண்டி பேசிக்கொண்டு இருவரும் ஏறிச் சென்றார்கள். வண்டி திருவேங்கடம் வீட்டின் முன் சென்று நின்றதும் அவன் இறங்கிப் போய் துரிதமாகத் தான் சேகரம் செய்து வைத்திருந்த உளவுகளை யெடுத்துக் கொண்டு வந்து வண்டி யில் ஏறினான். முதலில் பொத்தானை யெடுத்து ஆனந்த

லிங்கிடமளித்து "இது முழுமையும் புது மேனியாகவே யிருந்தால் அவ்வளவாக ருசுவுக்குப் பயன் படாது. ஆனால் இதன் பின் பக்கம் நாட் பட்டதால் ஒருவித நிறம் ஏறி யிருக்கிறது. இதனால் இது இருந்த பாதரட்சையைக் கண்டதே சுலபமா யறிந்து கொள்ளலாம் என்றான்.

ஆனந்தலிங் அவன் புத்தி கூர்மையை யறிந்து வியப் போடு "நேர்த்தியான வேலை. அப்புறம் கூறு" என்றான்.

திரு:—இது இலக்ஷ்மணன் பாதரட்சையிலிருந்து விழுந்த தல்ல. ஏனெனில் அவன் பாதரட்சையில் இத்தகைய பொத்தான் இல்லை. மேலும் அவன் தென்னூரி லிருந்து கொலை நடந்த தினத்திற்கு முன்னாள்தான் வந்தான். அதற்குள் ஒரு பாதரட்சையை வாங்கி இப் படி மாசடையும்படிச் செய்ய அவனுக்கு அவகாச மில்லை.

அதன் பிறகு திருவேங்கடம் மிகப் பத்திரமாக ஒரு சிப்பத்தை யெடுத்துப் பிரித்து அதிலிருந்து சுமார் நான் கங்குல சதுரமுள்ள ஒரு மண் மொத்தையை யெடுத்து ஆனந்தலிங்கிடமளித்தான். அதன் மத்தியில் வட்டமான ஒரு துவாரமிருந்தது. திருவேங்கடம் "இதைக் கொலை நட ந்த இடத்திலிருந்தே யெடுத்தேன்" என்றான். உடனே இருவரும் அதை யுற்று நோக்கியதும் இருவர்வாக்கிலிருந் தும் ஏககாலத்தில் "ஆ! இலக்ஷ்மணன் குறி" என்று வந்தது.

அதாவது இலக்ஷ்மணன் என்ற ஒருவன் சாதாரண மாய்க் கையில் கோல் போல் பிடித்துக் கொண்டு போகக் கூடியது. ஆனால் உண்மையில் நுனியில் கூரான எஃகு வைத்து ஒருவரைக் கொல்லக் கூடிய ஆயுதமாக உப யோகிக்கத் தக்கதுமான ஒரு கைக் கோலாயுதத்தைக்

கண்டு பிடித்தான். அது அவன் பெயராலேயே வழங்கியது.

ஆனந்தஸிங் "ஆ! இலக்ஷ்மணன் கொன்ருன்" என்று இறக்கும் சமயத்தில் இரத்னசாமிப் பிள்ளை கூறிய வார்த்தைகளைக் கூறினன்.

**திரு:**—"ஆ! நீ கண்டு கொள்வா யென்று எனக்குத் தெரியும்" என்ருன்.

**ஆனந்த:**—சிறுவனே! நீ ஒரு அதிசயமே. அபூர்வமான புத்தி காட்டியிருக்கிருய்.

இப்போது அம்மண்ணில் இருந்த அடையாளம் இலக்ஷமணன் என்ற கைக்கோலால் உண்டாக்கப்பட்டதே யென்று நிச்சயமாகத் தெரிந்து விட்டது. ஆனந்தஸிங்கே தன்னைப் புகழ்ந்து கூறியதால் திருவேங்கடம் சந்தோஷமும் உற்சாகமுமடைந்தான். கடைசியில் ஆனந்தஸிங் "திருவேங்கடம்! இப்போது இந்த விவகாரத்தை யாரம்பத்திலிருந்து கண்டறியப் போகிறேன். உன்னையும் கூட அழைத்துச் செல்லப் போகிறேன்" என்ருன்.

**திரு:**—"ஆகா என்னல் கூடியதைச் செய்ய நான் ஆயத்தமாயிருக்கிறேன்" என்ருன். இருவரும் முன்னே போலீஸ் தலைமை ஸ்தலத்திற்குச் சென்ருர்கள். ஆனந்தஸிங் இன்ஸ்பெக்டர் கள்ளழகம் பிள்ளையைக் கண்டு விசாரித்தான். இன்ஸ்பெக்டருக்கு அது பழங் கதையாயினும் அவன் பொறுமையோடு யாவும் கூறினன். ஆனந்தஸிங் முதலில் டெலிபோனில் சங்கதி கூறியமாதின் குரலைப் பற்றிக் கேட்டபோது.

**இன்ஸ்பெக்டர்:**—"அவள் கூறியதைச் சரியாகக் கேட்க முடியவில்லை. அவள் குழந்தைகள் இருமிக்கொண்டு பெருங்கோஷ்டமிட்டுக் கொண்டிருந்தன. அதோடு அங்கு போனேகிராப்பில் பாடிக்கொண் டிருந்தார்

கள். அது மட்டுமல்ல அங்கு கட்டிட வேலை நடந்து கொண்டிருக்கும் சத்தமும் இருந்தது. "ஆணி யடிப்பது முதலிய பல சத்தங்கள் கேட்டன." என்று மொழிந்தான்.

**ஆனந்த:**—அவள் யார்? பெயரைக் கூறவில்லையோ?

**இன்ஸ்:**—அவள் ஒரு தென்னுட்டாள். பெயரைக் கூறவில்லை. அவள் யாரென்றும் அவள் வீடு எங்கிருக்கிறதென்றும் கண்டு பிடிக்க முடியவில்லை. அவள் இருந்த விடத்தில் உண்டாயிருந்த கோஷ்டத்தால் அவள் கூறியதைக் கூட சரியாய்க் கேட்க முடியவில்லை.

**ஆனந்த:**—கடைசியில் சமாசாரத்தைத் தெரிந்து கொண்டாயோ?

**இன்ஸ்:**—இரத்னசாமிப் பிள்ளை யிறந்து போனரென்றும் அவர் சவம் கற்பகச் சோலையிலிருக்கிறதென்றும் அதை யவர்கள் வீட்டிற்குக் கொண்டு போக வேண்டுமென்று மட்டுமே கூறினுள்.

**ஆனந்த:**—பிறகு நீ என்ன செய்தாய்?

**இன்ஸ்:**—நான் உடனே அத்தோட்டத்தினருகிலிருக்கும் ஸ்டேஷனுக்குச் சங்கதி தெரிவித்தேன்.

ஆனந்தஸிங் இன்னும் சில விஷயங்களைக் கேட்டபின் இறந்தவர் காயத்தைப் பற்றி விசாரித்தான். இன்ஸ்பெக்டர் "அவர் கூர்மையான ஈட்டி போன்ற ஒரு ஆயுதத்தால் குத்தப்பட்டார். கூர்மையும் மிக்க குறுகிய அகல முடையதுமான ஆயுதம்" என்ருன். ஆனந்தஸிங் அந்த ஆயுதம் அகப்படவில்லையே என்றதற்கு இன்ஸ்பெக்டர் இல்லையென்ருன். அதோடு "கூடிய வரையில் கண்டு பிடிக்கப் பார்த்தும் அங்கு ஒரு ஆயுதமும் அகப்படவில்லை. கொலை செய்தவன் யாராயிருப்பினும் அவன் மிகக் கெட்டிக்காரன். இரத்னசாமிப்பிள்ளையை யங்கு சந்திப்போம் என்பதை

யறிந்து முன் யோசனையோடேயே வந்திருக்கிறான்." என்றான்.

ஆனந்தலிங் திருவேங்கடத்தைக் கூட அழைத்துக் கொண்டே போலீஸ் ஸ்டேஷனிலிருந்து அம்புஜத்தின் வீட்டிற்குச் சென்றான். அச்சமயம் அங்கு அனேகம் பேர் இருந்தார்கள். சுந்தரம் பழையபடி அங்கு வேலைக்கு வந்து விட்டான். அவனை யின்னும் ஏதோ சில கேள்விகள் கேட்கவேண்டுமென்று அச்சுதம்பிள்ளை துரைத்தன வக்கிலையும் துப்பறியும் கிருஷ்ணராவையும் அங்கு அழைத்து வந்திருந்தான். இன்னும் சிலரும் இருந்தார்கள். சுந்தரம் அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு விடை யளித்துக்கொண்டிருக்கிறான்.

ஆனந்தலிங் உள்ளே வந்ததும் அம்புஜம் "இவர்தான் இலக்ஷ்மணனுடைய சிநேகர்" என்று நான் கூறிய குருநாதன் என்பவர். இவர் இலக்ஷ்மணன் நிரபராதி யென்று பூரணமாய் நம்புகிறாராதலின் உங்கள் ஆலோசனைச் சபையில் இவரையும் சேர்த்துக் கொண்டால் இவர் ஒரு சமயம் இதுகாறும் உங்களுக்குத் தெரியாத எந்த சங்கதியையேனும் கூறக்கூடும்." என்றாள். துரைத்தன வக்கில் முதலியவர்கள் சரிதான் என்று ஒப்புக்கொண்டார்கள். திருவேங்கடமும் பிறகு வந்து அறையின் ஒரு மூலையில் உட்கார்ந்த போதும் ஒருவரும் ஆக்ஷேபனை செய்யவில்லை. அது இரகசிய விசாரணை யல்ல.

துரைத்தன வக்கில் சுந்தரத்தை நோக்கி "இரத்னசாமிப் பிள்ளை யிறந்த தினம் பிற்பகல் நீ எங்கெங்கே சென்றாய்?" என்று கேட்டார்.

சுந்தரம்:—"எனக்கு நினைப்பில்லை. அவர் இறந்து போன சங்கதி வந்தபோது நான் வீட்டிலிருந்தேன். அதற்கு

முன் நான் வெளியில் சென்றேனே இல்லையோ என க்கு நினைப்பில்லை.'' என்றான்.

வக்கீல் அவன் கூறிய மாதிரி சந்தேகத்திற்கிடமா யிருக்கிறதென்று கருதி பின்னும் கேள்விகள் கேட்டார்.

குருநாதன் ஒருவிதப் புன்னகை புரிந்து, "அவன் வேறிடத்திலிருந்ததாக ருசு கொண்டு வராததாலேயே அவன் கொலை நடந்த விடத்திற்குச் சென்றிருக்க வில்லை யென்பது பூரணமாய்த் தெரிகிறது'' என்றான்.

அதனால் உமது ஆழ்ந்த ஆலோசனைக்கு என்ன புலப் படுகிறது என்று துரைத்தன வக்கீல் கேட்டார்.

**குருநாதன்:**—சுந்தரன் இக்குற்றத்தில் சம்பந்தப்பட்டவனா யிருப்பின், கொலை நடந்த சமயத்தில் தான் வேறொரு இடத்தில் இருந்ததாக ருசுவுகளை யாயத்த மாய் முன்பே யேற்பாடு செய்து வைத்துக்கொண் டிருந்து உமது கேள்விகளுக்குச் சரியான விடைகள் அளித்து விட்டே யிருப்பான். அன்று பிற்பகல் தான் சென்ற விடங்கள் நினைப்பில்லை யென்று அவன் தாராளமாய்க் கூறுவதாலேயே அவன் இதில் சம் பந்தப்படவில்லை யென்று நன்கு விளங்குகிறது.

துரைத்தன வக்கீல் இந்த நியாயத்தைச் சிந்தித்து சரிதான் என்று ஒப்புக்கொண்டார். ஆனால் கிருஷ்ண ராவ் தலையிறக்கமடைந்து வக்கீலை நோக்கி, "அப்படியா னால் ஒருவன் வேறிடத்திலிருந்ததாய்க் கொண்டுவரும் ருசுவுகளெல்லாம் பயனற்றவைகள்தானே. ஏனெனில் இப்பண்டிதர் கூறுமாறு அவையாவும் கற்பனையே யன்றோ'' என்றான்.

குரு நாதன்:—"அப்படியல்ல. குற்றம் செய்தவன் கொண்டு வரும் அத்தகைய ருசுவே அவ்வாறு கவனித்துச் சோதிக்கத்தக்கது. இவன் குற்றவாளியாயிருந்தால்

அத்தகைய ருசுவை யாயத்தம் செய்து வைத்துக்கொண் டிருப்பான். அப்போது நினைவில்லை யென்று கூறியிருக்கமாட்டான்" என்றான்.

சுந்தரம், "ஆம். இவர் சொல்லுகிறதுதான் உண்மை. நான் எவ்வளவோ அன்பு வைத்திருந்த என் எஜமானை நான் ஒருபோதும் கொல்லத் துணியேன். அப்படி நான் செய்திருந்தால் முன்ஜாக்கிரதையாய் இவர் கூறியபடி ருசு ஏற்படுத்திக்கொண் டிருப்பேன். நான் அவ்வளவிற்குப் புத்தி யில்லாதவனல்ல" என்றான்.

அவனை வேறு கேள்விகள் கேட்பதால் ஒரு பயனு மில்லை யென்று தெரிந்தபடியால் அவன் அனுப்பிவிடப் பட்டான்.

கிருஷ்ணராவ் பார்த்தான். சுந்தரத்தின்மேல் தான் கொண்டுவந்த ருசு சற்றும் பயன்படாமற் போய்விடவே அம்புஜம் கண்டெடுத்த கடிதத்தைப்பற்றி ஆலோசனை செய்யவேண்டும் என்றான். அதன்மேல் அச்சுதம்பிள்ளை அக்கடிதத்தைப்பற்றி சற்று விஸ்தாரமாய்ப் பேசத் தொடங்கினன். அம்புஜம் அதைக்கண்டெடுத்தாள் என்பதை யொப்புக்கொண்டான். "ஆனல் அது இறந்தவருடைய அச்சு எந்திரத்தில் அன்னியரால் அச்சடிக்கப் பட்டதேயன்றி அவர்கையால் வரையப்பட்டதல்லவாதலின் அதை யொரு முக்கியமான ருசுவென்று கவனிப்பதற்கு அது தகுதியுடையதாக எனக்குப் புலப்படவில்லை. பெரும்பாலும் இது என் கட்சிக்காரனகிய இலக்ஷ்மணன்மேலிருக்கும் சந்தேகத்தை வேறொருவர்மேல் சுமத்தும் எண்ணத்தோடு உண்டாக்கப்பட்டதாக இருக்கலாம் என்பது என் அபிப்பிராயம்" என்றான்.

குருநாதன் சட்டென்று, "அப்படியானல் உமது கட்

சிக்காரன் மேல் இருக்கும் சந்தேகம் அப்படியே யிருக்க வேண்டு மென்று கருதுகிறீரோ?'' என்றான்.

அச்சு:—அவன்மேல் சந்தேகம் இருக்கவேண்டு மென்ப தல்ல. ஆனல் தவறான விஷயங்களால் என் கட்சிக் காரனுக்கு அனுகூலம்செய்ய எனக்கு விருப்பமில்லை.

அச்சமயம் அச்சுதம்பிள்ளை அம்புஜத்தைப் பார்க்க வில்லை. அவள் அக்கடிதத்தைச் சிருட்டி செய்தது அவ னுக்கு வெறுப்பே. அதை யாதாரமாக வைத்துக்கொண்டு பேசினல் அதன் உண்மை வெளியாய்விடலாகும் என்று கருதினன். அதனல் அதை யலட்சியமாகக் கருதும்படி செய்துவிட வேண்டுமென்பது அவன் எண்ணம்.

இந்த விவகாரமே துரைத்தன வக்கீலின் சந்தேகத் தைக் கிளப்பிவிட்டது. அவர், "அப்படியாயின் இது குற்றவாளியின் வேலையாகவே யிருக்கலாகாதோ? இலக்ஷ் மணன் இந்த வீட்டிலேயே யிருந்திருக்கிறன். இதைச் செய்ய அவனுக்குப்போதுமான அவகாசமிருந்திருக்கிறது.

இதைக்கேட்டதே அச்சுதம்பிள்ளை கலக்கமடைந் தான். இது இத்தகைய சந்தேகத்தை யுண்டாக்குமென்று அவன் அறிவான். ஆயினும் தான் முதல் கூறியபடியே முழுமையும் சாதிக்க வெண்ணி, "அது தாங்கள் தீர்மா னிக்கவேண்டிய விஷயம். இதை யவன் செய்யவில்லை யென்று எனக்கு நிச்சயமாய்த் தெரியும். தாங்கள் அவனே செய்தான் என்று ருசுபடுத்தக்கூடுமாயின் அப்படியே செய்யலாம்'' என்றான்.

அச்சமயம் அம்புஜம்:—"திருவேங்கடம் தான் கண்டு பிடித்த ருசுக்களைக் கூறுவானென்று நினைக்கிறேன்'' என்றாள்.

அச்சு:—"இதில் அவனைச் சம்பந்தப்படுத்த வேண்டாம். ஏனெனில் அவன் பெயரோ உடான் திருவேங்கடம்.

உண்மைபேச அவனால் முடியாது. வழக்கமாய்ப் பொய் பேசுகிறவன் இத்தகைய விவகாரத்தில் சேர்க்கப்படத் தகுதி யுடையவனல்ல" என்றான்.

திரு:—சாட்சி கூறும்போது நான் பொய்சொல்லமாட்டேன்" என்றான்.

அச்சுதம்பிள்ளை ஒரே பிடிவாதமாக அம்புஜத்தை நோக்கி இவனை வெளியில் போகச்சொல் என்றான்.

துரைத்தன வக்கீல் மட்டும் இதில் என்னமோ விவகாரமிருக்கிறதென்று உணர்ந்துகொண்டார். அச்சுதம்பிள்ளை என்னத்திற்காகவோ இவன் விஷயத்தில் அஞ்சுகிறான்; இவனிடமிருக்கும் உளவுகளால் தன் கட்சிக்காரனுக்குக் கெடுதியாகுமென்று எண்ணுகிறானே என்று சிந்தித்தார். கடைசியில் அச்சுதம்பிள்ளை திருவேங்கடத்தை வெளியிலனுப்பச் சொன்னதினாலேயே தாம் அவனை விசாரிக்கத் தொடங்கினார்.

முதலில் சில சாதாரண கேள்விகளைக் கேட்டபின் உனக்கு அகப்பட்ட உளவு என்ன என்று கேட்டார். திருவேங்கடம் பொத்தான் என்று முதலில் கூறியதும் அவர் மிக்க ஆவல்காட்டி, "ஆ! அது இலக்ஷ்மணனுடைய சட்டைப்பொத்தானாக விருக்கலாகுமோ? என்ன பொத்தான்" என்றார்.

திருவேங்கடம் உண்மையை மறைத்து அழகுப்பொத்தான் என்று கூற வாயெடுத்தான். அழ...அழ...என்று கடைசியில் பாதரட்சைப்பொத்தான் என்றான்.

அச்சுதம்பிள்ளை யுடனே ஆத்திரத்தோடு, "நான் இவனை விசாரிப்பதை யடியோடு ஆக்ஷேபிக்கிறேன். நான் கேட்டபோது இவன் அழகுக்கு வைக்கும் பொத்தான் என்றான். அப்படிக் கூறினையல்லவா?" என்றான்.

திரு:—ஆம். இப்போதுகூட அப்படித்தான் கூறிவிடவிருந்தேன்.

அச்சு:—"ஏன் மேற்சட்டை பொத்தானுக இருக்கலாகாது?" என்ருன்.

உடனே வாலிபன் கண்களில் ஒருவிதப்பிரகாசம் உண்டாயிற்று. அவன், "ஆம். ஆம். இப்போது நினைவிற்கு வந்தது. மேற்சட்டை பொத்தான் தான்" என்ருன்.

அச்சு:—"நாளைக்கு உட்சட்டை பொத்தாணுய்விடும்" என்ருன்.

திரு:—"ஆம். ஆம். எப்படியாயினும் அது ஒரு உளவேயாகும்" என்று அச்சுதம்பிள்ளையை யுற்று நோக்கிக் கூறினன்.

யாவரும் கலீலென்று நகைத்துவிட்டார்கள். திருவேங்கடம் அதனல் மனத்தாங்கலடைந்தவனுகக் காணப்படவில்லை. அவன் மற்றபேரைக் கேலி செய்தவன்போல் காணப்பட்டான். அச்சுதம்பிள்ளைமட்டும் முகக்கடுப்போடு, "உடனே இவனை வெளியில் போகச்சொல்லுங்கள். இது கேலி, அகசியம் பேசும் இடமா என்ன?" என்று பிரமாதமாய்ப் பேசினன். கடைசியில் திருவேங்கடம் வெளியில் அனுப்பப்பட்டான்.

---

## 21-வது அத்தியாயம்.

வெளியிலனுப்பப்பட்ட வாலிபன் சற்றேனும் மனவருத்தமின்றி அலட்சியமான பார்வை யோடேயே மெதுவாய் வெளியிற்சென்ருன். யாவற்றையும் புன்னகையோடு கவனித்துக்கொண்டிருந்த குருநாதன் அதாவது ஆனந்தலிங்மட்டுமே, "கடைசியில் இவ்வாலிபன் இத்தனைபேரையும் ஏமாற்றி மூடர்களாக்கிவிட்டான்"

என்ற உண்மையை உணர்ந்து கொண்டார். அம்புஜத்திற்கும் இப்படித்தான் இருக்கவேண்டுமென்று புலப்பட்டது.

அதுதான் உண்மை. எவ்வாறெனின் என்ன பொத்தான் என்று துரைத்தனவக்கில் கேட்டபோது அவன் முதலில் மறைத்துக்கூறவே யுத்தேசித்தவன் சற்று நேரத்திற்குமுன் சாட்சி கூறும்போது பொய்சொல்ல மாட்டேனென்பதை நினைத்து உண்மையைக் கூறினன். அதைக் கேட்டு கலக்கமடைந்த அச்சுதம்பிள்ளை "இவன் பொய் கூறுகிருன், முன்பு என்னிடம் அழகு பொத்தான் என்ருன்" என்று கூறியபோது திருவேங்கடம், "ஆம். இப்போதும் அப்படியேதான் கூறக் கருதினேன்" என்ருன்.

அச்சமயம் அறிவாளியாகிய துரைத்தனவக்கீல் "ஏன் மறைத்துக் கூறக்கருதினய்" என்று கேட்டிருந்தால் அவனிடம் உண்மையைக் கிரகித்திருக்கலாம். அப்படிக்கின்றி அச்சுதம்பிள்ளை அவனைக் கேலியாய்க்கேட்க இடம் கொடுத்துவிடவே, "ஓகோ. இச்சமயம் நாம் உண்மையைக் கூறுவது தவருகும்" என்றுணர்ந்து, "ஆம். சட்டைப் பொத்தான்தான்" என்று கூறி அவர்கள் தன் வார்த்தை முழுமையுமே அலட்சியமாகக் கருதிவிடும்படி இடங் கொடுத்துவிட்டான். ஏனெனில் அப்போதிருந்த சந்தர்ப்பத்தில் அவன் உண்மையைக் கூறித் தாபிக்க முயன்ருல் கடைசியில் அது நம்பப்படாமற் போய்விடும். ஆனல் அது யாருக்குப் பிரதிகூலமோ அந்த ஆள் ஓகோ இவன் உண்மையான உளவைக் கண்டு கொண்டானென்றுணர்ந்து அதைப் பயனற்றதாய்ச் செய்ய முயற்சி செய்வான். ஆகையால் நமது வார்த்தையை யடியோடு இவர்கள் அலட்சியம் செய்யட்டுமென்றே

பெரிய ஆலோசனை செய்தே அவ்வாறு நடந்து கொண்டான்.

துரைத்தன வக்கீலுக்கு மட்டும் ஏதோ மர்மமான விவகாரம் இருக்கிறதென்று புலப்பட்டது. ஆனால் அது என்னவென்று விளங்கவில்லை. அச்சுதம்பிள்ளை தன் நோக்கத்திற்றான் ஜெயமடைந்ததாய்ச் சந்தோஷமடைந்தான். கடைசியில் யாவரும் செல்லுமட்டும் ஆனந்தலிங் அங்கேயே யிருந்தான். எல்லாரும் போய் விட்டார்கள். கடைசியில் யாவரும் சென்றபின் அவன் அம்புஜத்தை நோக்கி "ஒருவரும் என்னை யறிந்து கொள்ளவில்லை. நான் ஒரு வருடத்திற்கு அதிகமாக இந்த நகரில் இல்லை. இவர்களில் ஒருவரும் எனக்கு அறிமுகமானவர்களல்ல. அச்சுதம் பிள்ளையை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் அறிமுகமில்லை" என்றான்.

அம்பு:—"அச்சுதம்பிள்ளை தம்மால் கூடியவரையில் பாடு படுகிறார். இலட்சுமணன் உண்மையில் நிரபராதியா யிருக்கும்போது சந்தர்ப்ப சாக்ஷியம் அவனுக்கு இவ்வளவு விரோதமாக விருப்பது மிக்க வியப்பே" என்றாள்.

ஆனந்:—இலக்ஷ்மணன் தனக்குத்தானே கொடிய விரோதியா யிருக்கிறான். நான் கேள்விப்பட்ட வரையில் அவனுடைய மாதிரி சற்றும் திருப்தியாயில்லை" என்றான்.

அம்பு:—அந்தோ! எப்போதும் அவனுடைய இயற்கைக் குணம் இம்மாதிரியே. அவன் சின்னவனாக இருக்கும்போது கூட அவன் செய்யாத ஒரு குற்றத்தை யவன்மேற் சாட்டினால் அவன் நேராய் நான் செய்ய வில்லை யென்று கூறமாட்டான். நம்மேல் இல்லாத குற்றத்தைச் சாட்டினார்களே யென்ற கோபத்தால்

"நான் செய்தேனோ இல்லையோ நான் கூறமாட்டேன்" என்பான்-அது அவன் இயற்கைக் குணம்.

ஆனந்த:—ஆயினும் அது அளவுகடந்து போகிறது. ஆனால் இத்தகைய குணமுடையவர்க ளிருக்கிறார்கள் என்று நான் அறிவேன்.

அம்பு:—நீ இலக்ஷ்மணனைக் கண்டு பேசுவாயல்லவா ?

ஆனந்த:—"சீக்கிரத்திலேயே காண்பேன். இப்போது நீ யவன் குணத்தைப்பற்றிக் கூறியபடியால் அவனிடம் எப்படி பேசி அவன் மனம்விட்டுக் கூறும்படிச் செய்வதென்பது எனக்குத் தெரிந்துவிட்டது. தயவு செய்து அந்த சுந்தரம் என்பவனை மறுபடியும் கொஞ் சம் இங்கு வரும்படி செய்கிறாயா" என்றான்.

அம்புஜம் கூப்பிட்டதும் இரண்டொரு நிமிடங்களில் சுந்தரம் வந்து அவர்கள் எதிரில் நின்றான். ஆனந்தலிங் அவனை நோக்கித் திடீலென்று "சுந்தரம்! உனக்கும் அச்சு தம் பிள்ளைக்கும் இரகசியமான ஒரு ஒப்பந்தம் இருக் கிறதே அதென்ன ?" என்று கேட்டான்.

சுந்தரம்:—தாங்கள் என்ன கேட்கிறீர்கள் என்பது எனக் குத் தெரிய வில்லை.

ஆனந்த:—ஓ! உனக்குத் தெரியும். நீ அச்சுதம் பிள்ளையின் கட்டளைப்படியே நடப்பது மட்டுமல்ல, உன் உடலும் உயிரும் அவன் கையில் இருக்கின்றன. அது எப் படி நேர்ந்தது?

சுந்த:— இல்லிங்கோ...ஆ...இல்லை.

ஆனந்த:—சுந்தரம்! நீ என்னை யேமாற்ற முடியாது. நான் உனக்குக் கெடுதி செய்யமாட்டேன். உண்மை யைக் கூறு.

ஆனந்தலிங்கின் கனிவான வார்த்தைகளைக் கேட்ட சுந்தரத்திற்கு அதற்குமேல் எதையும் மறைக்க முடிய

வில்லை. ஆகையால் அவன் "அய்யா! அவர் என் உயிரைக் காப்பாற்றினர்" என்றான்.

ஆனந்த:—ஓகோ! அதனால் அந்த உயிர் அவருடையதே. அது எப்படி நேர்ந்தது?

சுந்த:—அது நெடு நாட்களுக்கு முன் நேர்ந்தது. என்மேல் கொலைக்குற்றம் சாட்டப்பட்டது. இவர் என்னைக் காப்பாற்றினர்.

ஆனந்த:—நீ யுண்மையாகவே கொலை செய்திருந்தும் காப்பாற்றினரோ?

சுந்தரம் மெதுவாக "ஆம். அச்சங்கதி முழுமையும் தங்களுக்குத் தெரிந்தால்..." என்பதற்குள், ஆனந்தலிங் "அந்த விவரத்தைப்பற்றி யவசியமில்லை. அது நேர்ந்து நெடு நாட்களாயினவோ?" என்று வினவினன். சுந்தரம் சுமார் இருபது வருடங்களுக்கு முன் நேர்ந்தது" என்றான்.

ஆனந்த:—அது போகட்டும். அது முதல் அச்சுதம்பிள்ளை உன் உயிரைத் தன் வசத்திலேயே வைத்துக்கொண் டிருக்கிறானே?

186512

சுந்த:—ஆம் அய்யா. அது எனக்குச் சந்தோஷமே அவர் மட்டும் கேட்டால் நான் பிரியத்தோடு என் உயிரை யளித்து விடுவேன்.

ஆனந்த:—அவர் அப்படிக் கேட்பாரென்று கருதுகிறாயோ?

சுந்த:—எனக்கெப்படி தெரியும். கேட்டாலும் கேட்கலாம்.

ஆனந்த:—அதுவும் இப்போது நடக்கப்போகும் இலக்ஷ்மணன் என்பவனைப் பற்றிய விவகாரத்தின் சம்பந்தமாய்க் கேட்பாரோ?

சுந்த:—இருக்கலாம்.

ஆனந்த:—"இதில் உன்னை யென்ன செய்யச் சொல்லியிருக்கிறார்?" என்று கேட்டான்

சென்னை-600 018

புதிய நாவல் பெருகும் ஆவல்!!

நாவல் வாசிக்கும் நண்பருக்கு நல் விருந்து

# மாதவி மாதவன் அல்லது

## ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு.

(2-பாகம்.)

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவா கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

---

# அமராவதி 2-பாகம்.

ஆரணி குப்புசாமி முதலியா ரவர்களியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமுமுடையவனாயிருந்தால் அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்றாய் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

# இந்திராபாய்

இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய **முஷ்டிக்கரம்** என்ற திருடன் கல்வி, சாத்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமார்த்தியம் முதலிய யாவும் உடையவனாதலின், அவன் தன்கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட, தன் சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலை களவுகள் அதிசயமானவைகளே. **இந்திராபாய்** பன்முறைகளில் அவனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணாபத்துக்களிலிருந்து தப்புவதும், அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்கரத்தைக் கண்டு பிடிக்கவும் திப்பறியும் கிருஷ்ணாராவ் செய்யும் சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்குப் பிரமையையுண்டாக்கும்.

இதன் விலை ரூபா 2 8 0.

# ஆனந்தபோதினி

## (இனிய தமிழில் வெளிவரும் மாத சஞ்சிகை.)

இது, 20000 இருபதாயிரம் சந்தாதாரர்களை யுடையது; பன்னிரண்டு வருடங்கட்குமுன் தொடங்கி நடைபெற்று வருவது; டிம்மி 8-பக்க அளவில் 48-பக்கங்களுள்ளது. நாடோறும் மேலும் மேலும் புதிய சந்தாதாரர்கள் பலர் சேர்ந்து விருப்பத்துடன் ஆதரித்து வருவது. மனிதர் முக்கியமாக அடையத்தக்கனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கையும் பெறுதற்குரிய மார்க்கங்களைத் தெளிவாக விளக்கிக்காட்டக்கூடியது; செந்தமிழை விருத்திசெய்யத்தக்கது; பெண்மக்கள், ஆடவர், மாணவர், மாணவிகள், பாலர், விருத்தர்முதலிய எல்லோருக்கும் அறிவை விளக்கி ஆனந்தத்தைத் தரவல்லது; வகுப்புபேதமின்றிப் பொதுவில் நின்று சகலர்க்கும் நீதி கூறுவது. எல்லாநாடுகளிலும் தமிழறிந்த சகலரிடத்தும் பரவிவருவது; கல்வியின் மிக்காராகிய பலரால் எழுதப்பெறும் பற்பல வியாசங்கள் நிரம்பப்பெற்று வருவது; தேசநலம், தருமமார்க்கம், கைத்தொழில், விவசாயம், வாணிபம், வைத்தியம், சோதிடம், தாய்மொழி முதலியவற்றின்சார்பாக அநேக வியாசங்களும், தேசபக்தர் முதலிய பெரியார் சரித்திரங்களும், வர்த்தமானங்களும், நாவல்களும், பஞ்சாங்கமும் இதில் மாதந்தோறும் வெளிவரும்; ஆனந்தமூட்டும் விநோதவிஷயங்களும் நிறைந்துள்ளன. தமிழ் நாட்டில் அதிகரித்த சந்தாதாரர்களையுடையதும், நெடுங்காலமாக நிலைபெற்று நடந்துவருவதும், குறைந்த சந்தாத்தொகையுள்ளதுமான மாதசஞ்சிகை இஃதொன்றே. தமிழ்மக்கள் ஒவ்வொருவருக்கும் இது மிக அவசியமானது. ஆதலின், நண்பர்களே! இதற்கு உடனே சந்தாதாரராகச் சேருங்கள். முன்பண மனுப்பியாவது வி. பி-யிலாவது இப்பத்திரிகை பெற்றுக்கொள்ளலாம். இதன் வருட ஆரம்பம் ஒவ்வொரு வருடத்திலும் ஆடிமீ ஆதலால் எந்தமாதத்தில் ஒருவர் சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அவர்க்கு ஆடிமீ முதலே ஒரு வருடப் பத்திரிகை அனுப்பப்படும். மாதிரிக்காப்பி இனமாக அனுப்பப்படும்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாடுகளுக்கு
1-வருஷ சந்தா ரூபா 1—0—0

பினங், சிங்கப்பூர், நெட்டால் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0

வி. பி. யில்லாத நாடுகளிலுள்ளவர்கள் முன்பண மனுப்பவேண்டும்.

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.


Printed at the "Ananda Bo[illegible]ini" Press, Ma[illegible]